பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 02 திங்கட்கிழமை (16.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 201

# நாடளாவிய பொது வேலைநிறுத்தத்துக்கு முக்கிய தொழிற்சங்கங்கள் பல முஸ்தீபு!

## பெரும்பாலும் அறிவிப்பு இன்று வரும்

கொழும்பு, ஜூன் 16

**நாட்டு மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் பின்னணியில், சம்பள உயர்வு உட்படப் பல பிரதான கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பொது வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கு முக்கிய தொழிற்சங்கங்கள் பல ஒன்றிணைந்து தயாராகி வருகின்றன.**

இது பற்றிய அறிவிப்பு பெரும்பாலும் இன்று ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் அறிவிக்கப்படும் என்றும், அடுத்த மாத முற்பகுதியில் இந்தப் பொது வேலை நிறுத்தம் இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதில் ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கங்களே முழுத் தீவிரமாக உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கல்லடியில் சூடு இரு கான்ஸ்டபிள்கள் பலி

கொழும்பு, ஜூன் 16

மட்டு. கல்லடிப் பாலத்திற்குச் சமீபமாக வைத்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்திருக்கின்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானக் குண்டுவீச்சு; பொதுமக்கள் நால்வர் பலி! பாடசாலை அழிவு!!

கிளிநொச்சி,ஜூன் 16

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பின் நகர மத்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இலங்கை விமானப் படையின் கிபிர் ஜெற் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பொதுமக்கள் நால்வர் கொல்லப்பட்டனர் என்றும், பத்துப்பேர் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு நகர மத்தியில் மக்கள் குடியிருப்புகள், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி உள்ளடங்கலான பகுதிகள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இத்தாக்குதலில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயக் கட்டடங்கள் அழிந்தும் சேத

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவையில் தேடுதலில் 25 பேர் கைது

கொழும்பு, ஜூன் 16

பொலன்னறுவை, பெற்றிவெவ மற்றும் முஸ்லிம் கொலனி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுக்காலை மேற்கொண்ட சுற்றிவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன்16

இப்போது தமிழ்மக்களுக்கு கிடைத்துள்ள நிர்வாக பரவலாக்கல் மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதன் ஊடாகப் படிப்படியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காண முடியும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் இப்படிக் கூறினார்.

தென்பகுதியில் மாகாணசபைகள் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மக்கள் பயனடையும் வகையில் இடம்பெறுகின்றன. கிழக்கில் மாகாணசபை ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் அப் பகுதியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறுப் பகுதியில் ஊர்காவலர் மீது சூடு

கொழும்பு, ஜூன் 16

மணலாறு ஜனகபுரம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை தங்கம்மா காலமானார் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகலில்



ஈழத்தின் தலைசிறந்த சைவத் தமிழ் அறிஞரும் சமய, சமூகத் தொண்டருமான கலாநிதி, சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தமது 84 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கடந்த சில நாள்களாக நோய் வாய்ப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த அன்னை நேற்று நண்பகல் இவ்வுலகைவிட்டு நீத்தார். தமது சமய மற்றும் தமிழ் இலக்கியப் பேச்சுக்களால் பெயர் பெற்ற இவர், அவற்றின் மூலம் கிடைத்த நிதியைக் கொண்டு சமய, சமூகப் பணிகளைச் செய்து மக்களின் மனதில் இடம்பிடித்தவர். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிர்வாகப் பொறுப்பைச் சிறப்போடு ஆற்றிவந்தவர். ஆலயத் திருப்பணியோடு மட்டும் நிற்காது பலவகையான அறப்பணிகளையும் சமூகப் பணிகளையும் ஆற்றியவர்.

சைவ மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், சைவத் தமிழ் ஆய்வு நூலகம் என்று அறப்பணிகள் மற்றும் கல்விப் பணிகள் பல புரிந்தவர்.

தமது பிறந்த நாள் அறநிதியத்தின் மூலம் வருடாந்தம் சமூக, சமயக் கல்வி மற்றும் மருத்துவ சேவைகளுக்கு நன்கொடைகள் வழங்கி வந்தவர்.

அமைதியாகஇருந்து ஆன்மீகப்பணி, அருந்தமிழ்ப்பணி, அறப்பணிகள்பல ஆற்றிய அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் இழப்பு சைவத்துக்கும் தமிழுக்கும், தமிழர் சமூகத்துக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் திருவுடல் தெல்லிப்பழையில் உள்ள அவரது பிறந்த மனையான தெல்லிப்பழை 'தாமரை' இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் அங்கு நடைபெறும். அதன் பின்னர் அன்னையின் திருவுடல் துர்க்கை அம்மன் ஆலய யாத்திரிகர் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு மு.ப. 10 மணி தொடக்கம் சிறப்பு பிரார்த்தனை வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும். பி.ப. 2 மணிக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பமாகி அன்னையின் திருவுடல் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

சைவத்திலும் ஆலயத் தொண்டிலும் குடாநாட்டியில் புதுயுகம் படைத்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு உதயன் நிறுவனத்தினரின் உளம் நெகிழ்ந்த அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

(அ)



**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக் குட்டியின் பூதவுடல் தெல்லிப் பழையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருந்த போது எடுக்கப் பட்டபடம் .**





**அன்னையின் பூதவுடலைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மகளிர் இல்லக் குழந்தைகள் பிரிவு தாங்காது கதறி அழும் மனதை உருக்கும் காட்சிகளில் இரண்டு இங்கே.** (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அன்னை தங்கம்மாவின் மறைவு சைவ உலகுக்குப் பேரிடியும் பேரிழப்பும்

சைவத்தை வளர்ப்பதில் தன்னை இணைத்து இறுதி மூச்சு வரை அறப்பணியை முன்னெடுத்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி புதிய சமய பாரம்பரியத்தை அமைத்தவர். அவரது மறைவு சைவ உலகுக்கு பேரிடியாக, பேரிழப்பாக வந்துள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமச்சார்யா சுவாமிகள் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவு குறித்து மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி

### நல்லை ஆதீன முதல்வர் இரங்கல்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை மையமாகக் கொண்டு அறப் பணியாற்றிவந்த அன்னை, எங்கு சென்றாலும் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்க்கு தன்னாலான பணிகளை முன்னெடுத்தார். புதிய சமயப்பாரம்பரியம் ஒன்றைஅமைத்துச் சென்றுள்ளார்.

சைவ சமய மறுமலர்ச்சிக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்த அவர், அனாதைகளை அரவணைத்து அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு அத்திவாரம் இட்டார். அவர் நினைவாக அனைத்து இல்லங்களும், முதியோர் இல்லங்களும் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

அன்னையின் மறைவுக்கு எமது நெஞ்சம் கனத்த அஞ்சலியை செலுத்துகிறோம் - என்றுள்ளது. (அ-1)

## கண்ணீர் காணிக்கை



ஆதரவற்ற எ மை அரவணைத்து,
பராமரித்த அன்னை

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மையாரை இழந்து இன்று தவிக்கின்றோம். அவருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கிறோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல பழைய மாணவிகள்.

## கண்ணீர் அஞ்சலி



சைவத் தமிழ் உலகின் அகல்விளக்காக விளங்கிய எமது
கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவி
அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள் அம்பாள் திருவடியில் சேர்ந்தமையை அறிந்து எம் பணிவான அஞ்சலிகளை சமர்ப்பிக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், கல்விசாரா ஊழியர்கள்,
இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## பிரார்த்தனை செய்கிறோம்



சைவ உலகின் அன்னை சிவத்தமிழ்செல்வி

*கலாநிதி*

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் புண்ணிய ஆத்மா அம்பாள் திருவடி யில் அமைதியடைந்ததை அறிந்து எமது பிரார்த்தனையை சமர்ப்பிக்கின்றோம்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக் குடும்பம்.

## சிவபதம் அடைந்தார்

### சிவத்தமிழ்ச் செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, முன்னாள் ஆசிரியர், மட்டக்களப்பு சென்சிசிலியா, கொழும்பு பார்த்திமா முஸ்லீம் மகா வித்தியாலயம், அளவெட்டி சதானந்தா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி )



துர்க்காபுரம், மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னை நேற்று (15.06.2008) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 12.15 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தர் அப்பாக்குட்டி- தையல்பிள்ளை தம்பதிகளின் மகளும், அமரர் சின்னம்மா, கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் பொன்னம்பலம், அமரர் சண்முகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் மயில்வாகனம், அமரர் மாணிக்கம், கனகலட்சுமி ஆகியோரின் சிறிய தாயாரும், உமாசுதன் (திருமகள் அழுத்தகம்), பாமதி (தெல்லிப்பழை M.P.C.S.), ரேவதி (ஆசிரியர், கட்டுவன் புலம்), செந்தூரன் (அம்பாள் தொலைத்தொடர்பு நிறுவனம்) ஆகியோரின் பெரிய தாயாரும், ஞானேஸ்வரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கணேசலட்சுமி (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்ஜா (பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் மாமியாரும், பிருந்தா, கபிலன் ஆகியோரின் கோயில் அம்மம்மாவும் , உமையாள், உமைபாரதி, உமைவைரவி, சிரண்ஜா, சாயிராம் ஆகியோரின் கோயில் அப்பம்மாவும், டாக்டர் சிங்க அரியரட்ணத்தின் (தலைவர், 782 மினிபஸ் சங்கம்) அன்பு அன்ரியும், சைவ உலகின் ஆன்மீக வழிகாட்டியும் தாயும் ஆவார்.

அன்னாரின் பிறந்த மனையாகிய 'தாமரை' இல்லத்தில் இன்று (16.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பின் துர்க்காதேவி யாத்திரிகர் விடுதியில் முற்பகல் 10 மணிதொடக்கம் சிறப்புப் பிரார்த்தனை வழிபாடு, அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் திருவுடல் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தவர்

தொலைபேசி: 021 222 5309

## சமயக்குரல் மறைந்தது



தெல்லிப்பழை துர்க்காதேவி தர்மகர்த்தா சபைத் தலைவரும் தலைசிறந்த சமய சமூகப் பணியாளரும் ஒப்பற்ற பேச்சாளருமான *பண்டிதை கலாநிதி*

**தங்கம்மா அப்பாக்குட்டி**

யின் மறைவு எம் எல்லோரையும் துயரில் ஆழ்த்தி உள்ளது. அன்னையின் ஆத்மா சாந்திபெற்று துர்க்கை அம்பாளின் பாதாரவிந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களும் (பிரதம குரு), சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகத்தா சபையினரும்.

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

சைவமும் தமிழும் வளர தன்னையே அர்ப்பணித்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
காளி கோயிலடி, திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



சிறந்த சமய சமூகப் பணியாளரும் சமயப் பேச்சாளருமான நயினை அம்பாளிடம் தனது கன்னிப்பேச்சை ஆரம்பித்து உலகம் போற்றும் உத்தமியான

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

யின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாகபூசணி அம்பாளை வேண்டுகின்றோம்.

தலைவரும், அறங்காவலர் சபை உறுப்பினர்களும் ,
நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு.

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

சொல்லின் செல்வர் ஆறு திருமுருகனின் அறப்பணிக்கு வழிகாட்டிய அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு எமது கண்ணீர் காணிக்கைகள்.

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

உ
சிவமயம்

# விழிநீர் சொரிகின்றோம்



சிவத்தமிழ் செல்வி
கலாநிதி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மாவின் ஆத்மா திருவருளோடு இணைந்திருந்து எம்மை என்றும் வழிகாட்டட்டும். ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயம்
& சிங்கப்பூர் - இலங்கை
தமிழர் சங்கம்
19, சிலோன் சாலை,
சிங்கப்பூர், 429613.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் நிமிர்ந்து நிற்கும் இளையதம்பி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம்

ஆரம்பக்கல்வியை இப் பாடசாலையில் கற்ற பலர் இன்று இலங்கை நிர்வாக சேவையாளராகவும், பிரபல்ய வைத்தியர்களாகவும், பொறியியலாளராகவும், தனவந்தர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு பெருமை தெரிவித்துள்ளார் பாடசாலை அதிபர்.

குளங்கரைப் பாடசாலையென இன்றும் காரணப் பெயருடன் காணப் படும் இப் பாடசாலை 1902 ஆம் ஆண்டு இந்து சபையினால் (Hindu Board) இராஜரட்ணம் மற்றும் இளையதம்பி ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டு ஞானாந்த வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கியது.



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

1912 ஆம் ஆண்டளவில் தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையென பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1961 ஆம் ஆண்டு அரசினால் பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டபோது இப் பாடசாலை யும் அரச பாடசாலையாக கையேற்கப்பட்டது.

தொடர்ந்து 1983 ஆம் ஆண்டில் மீண்டும் இப் பாடசாலையின் அன்றைய அதி பரினால், பாடசாலை ஆரம்பகர்த்தாவும் பாடசாலைக்குக் காணி அன்பளித்தவருமான இளையதம்பியின் பெயரில், இளையதம்பி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையென பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1993 ஆம் ஆண்டு மீண்டும் இளையதம்பி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்று இன்று 106 வருடத்தில் வீறுநடை போடும் இப் பாடசாலை போட்டிகள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உள்ள வளத்தை உரியமுறையில் பயன்படுத்தி நிமிர்ந்து நிற்கின்றது என்கிறார் பாடசாலையின் அதிபர் முருகேசு செல்லையா.

தற்போது இப் பாடசாலையில் தரம் ஒன்றில் இருந்து ஜி.சீ.ஈ சாதாரணம் வரை வகுப்புகள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் தரம் 8 வரை வகுப்புகள் காணப்பட்டு 2000 ஆம் ஆண்டில் இருந்து தரம் 9 வரை வகுப்புகள் நடைபெற்றன. 2006 ஆம் ஆண்டில் இருந்து தரம் 10 உம் 2007 இல் தரம் 11 உம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஆண்டு முதல் தடவையாக ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியுள்ளார்கள்.

தரம் ஒன்று தொடக்கம் 11 வரை வகுப்புகளில் 168 மாணவர்கள் உள்ளனர். 12 ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள்.

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு 13 பிள்ளைகள் தோற்றி நான்கு பேர் சித்தி அடைந்து உயர்தரத்தில் கல்வி கற்கிறார்கள். இந்த ஆண்டு கடந்த ஆண்டைவிடக் கூடிய பெறுபேறுகளைப் பெறுவதற்கான முயற்சிகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கடந்த ஆண்டு 11 மாணவர்கள் தோற்றி 3 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் குறையே உள்ளது. அத்துடன் ஆரம்பப் பிரிவுக்கென ஒரு சில ஆசிரியரே கடமையாற்றுகிறார். அவருடன் தொண்டர் ஆசிரியர் ஒருவரும் கடமை புரிகின்றார்.




தமிழ்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்கள் கோட்ட மட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். தமிழ்த் தினப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளைப் பெற்று வலய மட்டத்திற்கும் சென்று வருகின்றனர்.

தரம் 11 வரையான வகுப்புகள் காணப்படுகின்ற போதிலும் விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாமை பெரும் குறைபாடாகக் காணப்படுகிறது. ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களில் ஒரு தொகுதி அதிபரின் அறையில் அலுமாரியில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப உபகரணங்கள் எடுக்கப்பட்டு வகுப்பறைகளில் வைத்துப் பயிற்சிகள் முடிந்தபின் மீண்டும் அங்கேயே வைத்துப் பூட்டப்படுகின்றன.

ஆய்வுகூடம் மட்டுமன்றி விஞ்ஞான பாட அறையும் இங்கு இல்லாத நிலைதான் உள்ளது. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சமயப் போட்டிகளில் கலந்துகொண்டு மாணவர்கள் பரிசில்களைப் பெறுகின்றார்கள். சுற்றாடலில் உள்ள இந்து ஆலயங்கள் நடத்தும் போட்டிகள், சைவ பரிபாலன சபை நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு வருகின்றார்கள்.

விளையாட்டு மைதானம் இல்லை. விளையாட்டுப் போட்டிகள் சுற்றாடலில் உள்ள காணிகளில் இடம்பெறுகின்றன.

அண்மையில் நல்லூர் கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் மகேந்திரன் காயத்திரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

குறிப்பிட்டளவு விளையாட்டு உபகரணங்கள் காணப்படுகின்ற போதிலும் மேலதிகமாக உபகரணங்களைப் பொருத்தி அபிவிருத்தி செய்ய இடவசதி இன்மை பெரும் தடையாகக் காணப்படுகின்றது.

பாடசாலையில் அபிவிருத்திச் சங்கம் இயங்குகின்றது. அதேபோன்று பழைய மாணவர் சங்கமும் இயங்குகின்றது.

குறிப்பாக நாளாந்தம் உடல் உழைப்பை நம்பி வாழும் பெற்றோர்களின் பிள்ளைகளே பாடசாலையில் கற்கின்றார்கள்.


பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகின்றார்கள்.

இதற்கு ஏற்ப அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் எந்த நேரமும் சுமூகமான உறவைப் பேணுகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் வரவு, ஒழுக்கம் மற்றும் மேலதிக வகுப்புகள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி நல்ல உறவைப் பேணி வருகின்றனர்.

வகுப்பறைகளில் மூன்று வகுப்பறைகள் மூடிய அறைகளாக மாணவர்களின் இன்றைய கற்றல் வசதிக்கு ஏற்ப காணப்படுகின்ற போதிலும் ஏனைய வகுப்பறைகள் திறந்த வகுப்பறைகளாகவும் மற்றும் தற்காலிக தடுப்புகள் கொண்டு அமைக்கப்பட்ட வகுப்புகளாவும் காணப்படுகின்றன.

ஒரேயொரு கணனி மட்டும் உள்ளமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு வழங்க முடியாத நிலைமை காணப்படுகின்ற போதிலும் கணனி மாணவர்களுக்குக் கற்றலுடன் தொடர்புடைய இறுவட்டுக்களைப் பார்வையிடப் பயன்படுத்தப்படுகின்றது.


பாடசாலை அதிபர்

பாடசாலையின் மாணவ மன்றங்கள் நல்ல முறையில் இயங்குகின்றன. பாடசாலைச் சுற்றாடல், சுகாதாரம் முதல் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

உலக உணவுத்திட்டம் மாணவர்களுக்குக் கூடிய பயன்பாடு உடையதாகக் காணப்படுகின்றது. பெற்றோர்கள் உணவு சமைப்பதற்கு முழுமை யான உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

மாணவர்களின் தேவையை உணர்ந்து பாடசாலைக்கு அரசசார் பற்ற நிறுவனங்கள் மற்றும் சிறுவர் அமைப்புகள் நேரடியாகப் பாடசாலைக்கு வருகைதந்து உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையும் பாடசாலை அதிபர் விடுத்துள்ளார்.!

**பவித்திரன்**

## போட்டிகளில் வெற்றி பெற்று தமிழ் மாணவர்களின் மதிப்பை முதன்மைப் படுத்துவதே நோக்கம்

### ஈட்டி எறிதலில் மாகாண மட்டத்திற்குத் தெரிவான மாணவி தர்ஷிகா கூறுகிறார்



தேசிய மட்டத்தில்திறமையை வெளிப்படுத்தி முதலிடம்பெற்று தமிழ் மாணவர்களின் மதிப்பை முதன்மைப்படுத்துவதே எனது நோக்கம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஈட்டி எறிதல் போட்டியில் பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்ற ஊரெழு கணேச வித்தியாசாலை மாணவியான செல்வி குணரட்ணம் தர்ஷிகா.

பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டியில் ஓரளவு திறமையை வெளிப்படுத்தியதை அவதானித்த அதிபர், ஆசிரியர்கள் என்னை மேலும் ஊக்கப்படுத்தி பயிற்சிகள் அளித்து கோட்ட, வலய, மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெற ஊக்குவித்தனர்.

இதனை அடுத்து மாகாண மட்டப் போட்டிகளுக்குச் செல்வுள்ளேன். அங்கும் முதலிடம் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. குடும்பத்தில் ஏழு உடன் பிறப்புக்கள். தந்தையார் சாதாரண கூலித்தொழில் புரிந்து குடும்பத்தைக் கவனித்து வருகிறார்.

தற்போதைய பொருள்களின் விலை அதிகரிப்பால் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கஷ்டத்தை எதிர் நோக்குவதாகத் தெரிவித்த செல்வி கு.தர்ஷிகா, இந் நிலையிலும் எனது பெற்றோர் ஊக்குவித்தமைக்கு நன்றி செலுத்துவதாகக் கூறினார்.

என்ன வாழ்வியல் கஷ்டங்கள் இருந்தாலும் என்போன்ற குடும்ப நிலையில் உள்ள மாணவர்களிற்குப் பெற்றோர்கள் ஊக்கமளிப்பதுடன் தொண்டு நிறுவனங்களும் உதவ முன்வரவேண்டும் என்றார்.

(203-72)






கல்விச் சுற்றுலா மேற்கொண்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் உதயனுக்கும் வருகை தந்திருந்தனர். அதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் இழந்து போன கல்விப் பாரம்பரியத்தை மீளக்கட்டி எழுப்பும் பொறுப்பு மாணவருடையது

## பேராசிரியர் குகபாலன் சொல்கிறார்

நல்லூர், ஜூன்16

தீவகம் இழந்து போன கல்விப் பாரம்பரியத்தையும் பொருளாதார வளத்தையும் மீளக்கட்டியெழுப்பும் பொறுப்பு மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் தங்கியுள்ளது.

வேலணை மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் இவ்வாறு கூறினார்.

கி. உதயராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் குகபாலன் மேலும் கூறியதாவது:-

இன்றைய அசாதாரண சூழலின் காரணமாக பெரும் எண்ணிக்கையானோர் இடம் பெயர்ந்து செல்ல, எஞ்சியுள்ளவர்களில்அனேகர் வறுமைக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். இதனால் கல்வியும் வறுமைக்குள்ளானது.

இந்நிலையில் தீவுப்பகுதியில் இருந்து புலம் பெயர்ந்துள்ளவர்களில் சமூக சிந்தனையுள்ள மக்கள் தமது பகுதியின் கல்விக்காகவும் மதவழிபாடுகளைத் தொடரவும் ஏனைய சில தேவைகளை நிறைவு செய்யவும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவர்கள் வழங்கும் உதவிகள் மாணவர்களின் கல்வியில் புலம் பெயர்ந்த மக்கள் கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகிறது.

எனினும் இந்த உதவிகளையே நாம் எதிர்பார்த்திருக்க முடியாது. வெளிநாடுகளில் வாழும் எமது இளையதலைமுறையினர் தமது பெற்றோர்கள் மூதாதையர்களின் மண்ணை எந்த அளவுக்கு நேசிப்பார்களோ என்று கூறமுடியாது.

முதலாவதுபரம்பரையினர் தமது அபிலாஷைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக வாழ வேண்டும் என்ற நிலைக்கு மாறியுள்ளனர்.

வரப்போகும் அடுத்த சந்ததியினர் எமது நாட்டையோ பிரதேசத்தையோ அறியாதவர்களாகத் தான் இருக்கப் போகிறார்கள்.

இந்த நிலையில் எமது கல்வியையும் பொருளாதாரங்களையும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று அடுத்துவரும் சந்ததிகளிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு மாணவர்களுக்கு உண்டு.

அதற்கு முன்னோடியாக தமது கல்வியில் எமது மாணவர்கள் வளர்ச்சிபெற வேண்டும். தீவுப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் வேலணை மத்திய கல்லூரியின் பங்களிப்பு முதன்மையானது. அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர், ஆசிரியர்களின் உதவியுடன் கல்வியை மீளவும் சிறப்பாகப் பெற்று தீவகத்தின் வளர்ச்சிக்காக மாண வர்கள் தமது அளப்பரிய பங்களிப்பை வழங்க உறுதி பூண வேண்டும்- என்றார்.

(203-111)




MJ MAHARAJ

உள்ளூர் VAN சேவை

1 km = Rs.40

உடன் அழையுங்கள்

222 6659, 077 3114803, 222 9653

(75257)


# வெங்காயம் 120 ரூபா

சுழிபுரம்,ஜூன்16

சுழிபுரம் சத்தியக் காட்டுச் சந்தையில் வெங்காயம் ஒரு கிலோ கடந்த வெள்ளி முதல் 120 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

முதல் நாள் 80 ரூபாவாக விற்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தி இல்லாமையால் வியாபாரிகள் தூர இடங்களில் கொள்வனவு செய்து வந்து வெங்காயத்தை விற்பதாகக் கூறப்படுகின்றது. (203-28)

# மோட்டர் திருட்டு

வலி.தென்மேற்கு,ஜூன்16

இரவுவேளை வீட்டுக் கிணற்றடியில் வைக்கப்பீட்டிருந்த மின்சார மோட்டர் ஒன்று திருட்டுப் போன சம்பவம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள வீடு ஒன்றில் நடைபெற்றுள்ளது. (203-135)

# யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றுவது என்பது விடுதலைப் புலிகளுக்கு கனவாகவே இருக்கும்

## இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 16

யாழ்ப்பாணம் முழுவதையும்விடுதலைப் புலிகள் கைப்பற்றுவது என்பது அவர்களது கனவாக மட்டும்தான் இருக்க முடியும்.

இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குடாநாட்டின் மீதான விடுதலைப் புலிகளின் நடவடிக்கை குறித்த புலனாய்வுத் தகவல் தொடர்பாகச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

விடுதலைப் புலிகளால் குடாநாட்டில் மக்களை இலக்கு வைத்து கிளைமோர் வைக்க முடியும், பிஸ்டல் குழுவாக இயங்க முடியும். இவை தவிர எதுவுமே செய்ய இயலாது-என்று கூறியுள்ளார். (203)

# OBITUARY

## Dr.A.Jothidas, Ph.D,

Associate Professor, National University, Singapore



Death is announced of Dr.A.Jothidas, beloved husdband of Jebarani, beloved father of Arun and Avanthi, son of the late Mr.and the late Mrs.V.N. Aiyathurai of Church Lane, Chavakachcheri, son - in - law of Revd& Mrs. Solomon (Australia), brother of Jothimalar (retired teacher, Australia), Kirubamalar (Teacher, Nuffield School, Kaitadi), Gnanathasan (Additional Solicitor General Colombo), Kirubaidasan (Solicitor, Australia), Thangamalar (Accountant Australia), brother in law of Mahendran (Australia), Dr.David Retnanathan (ActingRegional Dental Surgeon, Jaffna), Mythili (Australia), Dr.Ariyarani (Senior Lecturer in Medicine, Colombo) and uncle of Sakunthala, Vimal, Nathie and Sam (Australia).

Funeral will takeplace in Singapopre

Informant

**Dr.V.David Retnanathan,**
Lawton Road, Manipay
Telephone numbers, 077 6171451
and 077 3164619

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு

(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ.சபை)

வீரபத்திராயன், கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ.ச) நேற்று (15.06.2008) ஞாயிறு காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை தில்லையம்பலத்தின் அன்புச் சகோதரனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கிரிதரன் (லண்டன்), முரளிதரன் (கிளைமுகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற ரவிதரன், சுகிதரன் (வெளிக்களப் போதனாசிரியர், பிரதேச செயலகம், செட்டி குளம்), யசோதா, தாட்சாயினி (2002/2003 தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முரளிதரன் (பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா) விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் அபிநாத், சஹானா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.06.2008) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
கா.சரஸ்வதி (மனைவி),
பிள்ளைகள்.

(74954)

## சோமசுந்தரம் திருநாவுக்கரசு (அரசன்)

(வர்த்தகர் - குருநாகல்)



காரைநகர், களபூமி, கொம்பாவோடையைப் பிறப்பிடமாகவும் 635/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் திருநாவுக்கரசு நேற்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சாந்தி, புஷ்பா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன், உமாபதி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் கவிதா, கௌசிகா, கஜன், கணேஷன், அஜந்தன், வேலு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் கே.கே.எஸ் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

635/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(75342)

தகவல்:
பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும் வளர்ச்சிபெற தன்னையே முழுமையாக அர்ப்பனித்து இயங்கிய

அன்னை

## தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்து கொள்வதுடன், அவரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கரிகணன் பிரின்டேர்ஸ்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த அஞ்சல் திணைக்களத்தில் சேவையாற்றி இளைப்பாறிய ஏரம்பமூர்த்தி புண் ணியமூர்த்தி அவர்கள் 15.06.08 அன்று காலை யாழ்ப்பாணத்தில் காலமாகி விட் டார்.

இவர் காலஞ்சென்ற நாகரெத்தின அம்மாளின் அன்புக் கணவரும் கிருபாமூர்த்தி, குகநாதன், க்ணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினம், புவனேஸ்வரி, தேவிகா ராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பாமினி ஆனந்த, காயத்திரி, அகிலன், கபிலன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-06-2008 ) திங்கட் கிழமை மாலை வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
P. கணேசமூர்த்தி

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா தர்மலிங்கம்

( முன்னாள் V.K.V. & Bros. உரிமையாளர் Colombo 12)



யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பாமன்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் 14-06-2008 சனிக்கிழமையன்று இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா-நாகம்மா தம் பதிகளின் புத்திரனும், லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் , காலஞ் சென்ற அரசலிங்கம் - திலகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஷாமளி (Canada), தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயில்வாகனம்,இராசதுரை (மலேசியா), காலஞ்சென்ற நடராஜா, சிவம்மா, சோதி, பொன்னையா ஆகியோரின் இளைய சகோதரனும், காலஞ் சென்ற விஸ்வலிங்கம், சிவலிங்கம், சிவனேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரனும், ராஜ்மோகனின் அன்பு மாமனாரும், பிரியங்கா, அக்ஷய் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-06-2008) திங்கட் கிழமை பிற்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட் டுக் கொள்கின்றோம்.

No.28,
Grairoplace,
Paman kade,
Colombo -06
T.P.011- 2581927

தகவல்:
அன்னாரின் பிரிவால்
துயருறும்
மனைவி, மக்கள்,
மருமகன்,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவுக்குச் சென்று திரும்பும் ஆசிரியர்களின் போக்குவரத்துப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 16

மண்டைதீவுப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் போக்குவரத் துப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுக்கான போக்குவரத்துச் சேவை ஒழுங்காக நடைபெறாது உள்ளமையால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவு மகா வித்தியாலய அதிபரின் கோரிக்கையை அடுத்து இலங்கை போக்குவரத்துச் சபை யினர் பஸ்சேவையை உரிய நேரத்தில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுவரை காலமும் சீரான போக்குவரத்துச் சேவை இடம்பெறாமையால் ஆசிரியர்கள் உரிய நேரங்களுக்குப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

இனிவரும் காலங்களில் உரிய பாடசாலை நேரங்களில் பாடசாலை சேவை நடத்தப்படும் என்றும் பயணிகளின் ஒத்துழைப்பை பொறுத்து மேலதிக சேவை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (203-302)

### ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன்16

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற் றது.

கண்காட்சியினை தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பொ.இரவிச்சந்திரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். (203-207)

# யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் இன்று தொடக்கம் நினைவுப் பேருரைகள்

## எட்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன்16

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் எட்டாம் ஆண்டு நிறைவையொட்டி கல்லூரியின் பலநோக்கு மாநாட்டு மண்டபத்தில் இன்று தொடக்கம் காலை 8.30 மணிக்கு நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்படவுள்ளன.

பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் இன்று முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயர் நினைவுப் பேருரையில் 'திருக்கோயில்களில் கலைகள்' என்னும் தலைப்பில் இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சு. ஸ்ரீமுரளிதரன் உரையாற்றவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை மூதறிஞர் சொக்கன் நினைவுப் பேருரையில் 'தரணி போற்றும் தமிழ் இசை' என்னும் தலைப்பில் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் சி. சூரியகுமார் உரையாற்றவுள்ளார்.

19 ஆம் திகதி பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையில் 'காலம் தோறும் கவிதை' என்னும்தலைப்பில்யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா உரை நிகழ்த்துவார்.

20 ஆம் திகதி பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப் பேருரையில் 'ஆரம்பக் கல்விப் போக்குகளும் எதிர்கால அறை கூவல்களும்' என்னும் தலைப்பில் கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெ.இராசநாயம் உரையாற்றுவார்.

23 ஆம் திகதி பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையில் 'பாடசாலைகளுக்கான தலைமைத்துவம்' என்னும் தலைப்பில் வணிகபீட பீடா திபதி கே. தேவராஜா உரை நிகழ்த்துவார். (203)

### நாயுடன் விளையாடிய ஆட்டுக்குட்டி; பிடிக்கச் சென்றவரை அது கடித்தது

யாழ்ப்பாணம்,ஜூன்16

நாயுடன் விளையாடிய ஆட்டுக்குட்டியினை பிடித்தவரை நாய் கடித்துக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இ.மயில்வாகனம் என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இவரது ஆட்டுக்குட்டி பக்கத்து வீட்டு நாயுடன் விளையாடிக் கொண்டிருந்த போது இச் ம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (207-203)





தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப் - சிற்றி' திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நாடாவெட்டி கோப் சிற்றியை திறந்து வைப்பதையும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பொருள்கள் கொள்வனவு செய்வதையும் அருகில் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (207)

### வீதியில் கண்டெடுக்கப்பட்ட கைத்தொலைபேசி உரியவரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்16

வீதியில் கண்டெடுத்த கையடக்கத் தொலைபேசியை அதன் உரிமையாளரை வரவழைத்துக் கையளித்த சம்பவம் அண்மையில் மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

வீதியில் நடந்து சென்ற இப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் வீதியோரமாக தொலைபேசி மணியடித்ததைக் கண்டு அதனை எடுத்துச் சென்று தனது வீட்டில் வைத்துள்ளார்.

சிறிது நேரத்தில் மீண்டும் தொலைபேசி மணியடித்தபோது தொலைபேசி உரிமையாளர் கதைத்ததால் வீட்டுக்கு வருமாறு கூறியுள்ளர்.

மானிப்பாயியிலிருந்து உரிமையாளர் இவரது வீட்டுக்கு வந்ததும் தொலைபேசியை கையளித்துள்ளார். (203-207)

# ஜூன் மாதத்தைச் சத்துணவு மாதமாக சுகாதார அமைச்சு பிரகடனம் செய்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஆரோக்கியம் பேணலும், சத்துணவுத் திட்டத்துக்குமான மாதமாக சுகாதார அமைச்சு ஜூன் மாதத்தை சத்துணவு மாதமாகப் பிரகடனம் செய்துள்ளது. இதன் பிரதான நோக்கம் குழந்தைகளதும் சிறுவர்களதும் உணவுப் பெறுமானத்தின் ஊட்டச்சத்தினை தரம் உயர்த்துவதேயா கும்.

இலங்கையில் கர்ப்பிணிகளதும் சிறுவர்களதும் இறப்பு வீதமானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவனதாய் இருந்தாலும் இங்கு வாழும் மக் கள் உணவின் ஊட்டத்தினை பேணுவ தில் காட்டும் ஆர்வமானது மிகவும் திருப்திகரமற்றே உள்ளது. இத்தகைய நிலைமையினால் மக்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட உணவின் ஊட்டத்தினை பேணுவதற்கான முறைகளைத் தொடரத் தவறுகின்றனர்.

இலங்கையில் 5 வயதிற்குட்பட்டோரில் குறிப்பிட்ட சதவீகிதத்தினர் சத்துணவு தாக்கத்திற்குள்ளாவதால் பிறகாலத்தில் சலரோகம், உயர்குருதி அமுக்கம், டெங்கு போன்ற நோய்களின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு ஜூன் மாதம் சத்துணவு மாதமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (203)

# குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### வடிகாலின் மூடி சேதம் போக்குவரத்தில் சிரமம்

யாழ். கஸ்தூரியார் வீதியில் மாக்வெட் எரிபொருள் விநியோக நிலையத்திற்கு அண்மையாக வடிகால்களை மூடிப் போடப்பட்டிருந்த மூடிகள் உடைந்து காணப்படுகின்றன. இதனால் அப்பகுதிகளால் பயணம் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். நீண்டகாலமாக இது இவ்வாறு காணப்படுவதாகவும் எவருமே இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

உரியவர்கள் இந்த விடயத்தில் அக் கறை எடுத்துச் செயற்பட வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203)

### யாழ்.வலய உத்தியோகத்தரின் பதவிக்காலப் பாவனைக்கென மோட்டார் சைக்கிள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் மோட்டார் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பதவிக்காலத்தின் பாவனைக்கென ஆறு மோட்டார் சைக்கிள்களை யாழ்.வலயத்திற்கு வழங்கியுள்ளதாகக் கூறப்பட்டது.

கணக்காளர், ஆசிரிய வள முகாமையாளர், முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் மற்றும் மூன்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் பாவனைக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. (203-302)

### கணித, விஞ்ஞான வினாடிவினாப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன்16

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கிடையிலான தமிழ்மொழி மூல கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும்.

அன்றைய தினம் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையிலான மாணவர்களுக்கான ஆங்கிலமொழி மூல வினாடிவினாப் போட்டிகளும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

# வீட்டு மின் இணைப்பு பயிற்சி; விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

நவாலி, ஜூன்16

சண்டிலிப்பாயிலுள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை வீட்டு மின் இணைப்பு தொழிற்பயிற்சியை வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி 6 மாத காலத்திற்கு வழங்கப்படும். பயிற்சியின் போது ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 'இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு விண்ணப் பங்களை அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (203-100)

# தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளுக்கு 'போருட்' நிறுவனம் ஊடாகச் ச்சத்துணவு

யாழ்ப்பாணம், ஜூன்16

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு சத்துணவு வழங்க 'போரூட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை பிரிவுகளின் கீழ் இயங்கும் 74 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் பாலர்களுக்கு இந்தச் சத்துணவு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் ஆயிரத்து 574 பாலர்கள் போசாக்குணவை பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இத்திட்டத்தின் அடிப்படையில் கடந்த வாரமளவில் போசாக்குணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கொடிகாமத்தில் இயங்கும் சாவகச்சேரிப்பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கம் கொடிகாமம் மத்தி முன்பள்ளி ஆசிரியரிடம் போசாக்கு உணவை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஐங்கரன் முன்பள்ளிக்கு பிரதேச சபையின் பிரதம எழுதுநர் திருமதி கௌ. விக்னகுமார் வழங்கினார்.

பயறு, அவல், சீனி, உழுந்து என்பன மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்பட்டன.

சகல முன்பள்ளிகளும் இத் திட்டத்தில் இணைந்து பாலகர்களின் போசாக்கினை மேம்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முன்பள்ளிகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு உதவு தொகையாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203-131)

எல்லையற்ற செய்தியாளர்
REPORTERS WITHOUT BORDER
இது புதியது! புதினம் சொல்வது!!
நீங்களும் செய்தியாளராகலாம்.
தாமதிக்காதீர்கள் இன்றே உரிய தரவுகளுடன்
news@uthayan.com
photo@uthayan.com
எனும் ஈ - மெயில்களுக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible] பகிர்கின்றோம்

யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி ச.பிரேமானந்தியின் அன்புக் கணவர்

**சண்முகராஜா சந்திரகுமார்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்.

(753224)

## நீங்காத நினைவஞ்சலி



மண்ணின் மடியில் 04 . 01 . 1957

ஆண்டவன் அடியில் 19 . 03 . 2008

அமரர்
**கதிர்காமு கனகராஜா (பபி)**
(கிராம உத்தியோகத்தர், பரந்தன்)

கண்ணிலும் இனிய என் பபி அண்ணாவே!
கருத்திலும் என் தோழிலிலும் இணைந்த என் மைத்துனரே!
கட்டி அணைத்து கனிவாய் முத்தமிடும் ஆசை பபி மாமாவே!
கண் காணாத இடம் தேடிப் போனதேனோ?
கனவிலும் நீ நினைவிலும் நீ உங்களை எண்ணி
கண்ணில் நீர் சொரியக் கலங்குகின்றோம் கதறுகின்றோம்.

ஆத்மா சாந்தி பெறுக!

தகவல்:
த.வதனரூபன் (G.S.),
சுப்பிரமணிய வாசம்,
புலோலி மேற்கு, புலோலி.

உமது பிரிவால் துயருறும்:
மைத்துனர், சகோதரி
மருமக்கள்.

(ஏ/553328)

## அபிராமி அந்தாதி இலவச வெளியீடு

சுழிபுரம், ஜூன்15

அபிராமி அந்தாதி பாடல்களில் நாற்பத்தாறாவது பாடல் ஆய்வுரையை மீண்டும் பதிப்பித்து வெளியிடுமாறு பலர் வேண்டிய வேண்டுதலை ஏற்று பஜனைச் சபையார் வெளியிட்டுள்ளனர்.

இந்த இலவச வெளியீட்டில் தவறு செய்தல் மனிதவியல்பு, மன்னித்தல் மகேசன் இயல்பு என்ற கருத்தை இப்பாடல் அழகாக எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர் புலவர் கே.சந்தானராமன் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பாடல் வெளியீட்டை இலவசமாக தபாலில் பெற்றுக் கொள்ளலாம். ஐந்து ரூபா கொண்ட முத்திரையை 'செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம்' என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த வெளியீட்டை பேராதனை பல்வைத்திய விரிவுரையாளர் டாக்டர் தி.ஆனந்த மூர்த்தி தமது தந்தையார் நினைவாக வெளியிடப் பணம் வழங்கி உதவியுள்ளதாக பஜனைச் சபையார் தெரிவித்துள்ளனர். (203-28)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5.15 இற்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அன்று வேதபாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், நாம அர்ச்சனை, திருநீற்றுப் பதிகம், கோளாறு பதிகம், பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். (1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின்
பதில் அதிபரும் பிரதி அதிபரும்
கணிதபாட ஆசிரியருமாகிய

**திரு.கு.வே.மகேந்திரன்**

கல்லூரியின் தவமகனாய்
கணிதபாட மேதையாய்
மாணவரின் உயர்வுக்காய்
உழைத்து உயர்வுபெற்றீர் - உங்கள்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
பதவி சிறக்க வாழ்த்தும்.

மாணவத் தலைவர்கள் 2009,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

[75327]

## மகோற்சவ விழா

மிருசுவில் (கொட்டிகை)
கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான மகோற்சவம்
கடந்த 09.06.2008 கொடியேற்றத்துடன்
ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

16 - 06 - 2008 திங்கள் சப்பரம் பி.ப. 4.00
17 - 06 - 2008 செவ்வாய் தேர் முற்பகல் 10.00
18 - 06 - 2008 புதன் தீர்த்தம் முற்பகல் 10.30

தொடர்ந்து பி.ப. 3.30 மணிக்கு கொடி இறக்கமும்
அதனைத் தொடர்ந்து ஆலய மகோற்சவ
பிரதமகுரு கரவை கரம்பனைச் சேர்ந்த
சிவஸ்ரீ சி.ரஞ்சன் குருக்கள் அவர்களை
கௌரவித்துப் பாராட்டுவிழாவும் நடைபெறும்.

மிருசுவில். ஆலய நிர்வாகிகள்.

(75319)

## ஓராண்டு நினைவலைகள்

திருமதி
**தனலெட்சுமி சபாநாதன் (தயா)**



அன்னை மடியில் 18.08.1954

ஆண்டவன் அடியில் 27.06.2007

திதி: திரயோதசி (16.06.2008)

எனதன்புத் தயாவே!
ஆண்டொன்று சென்றதுவோ நீ உறங்கி - நான்
காண்பது கனவாக இல்லையே தயா - நாம்
வேண்டிய தெய்வமெல்லாம் கைவிட்டதனால்
கூண்டுக் கிளிபோல் சிறகுடைந்து போனேனே - உந்தன்
மெல்லிய புன்னகை மறைந்தாலும் - நீ
சொல்லிய குறும்புகள் மறையலையே
அல்லும் பகலும் வாட்டும் உந்தன் நினைவு
கல்லில் எழுதிய எழுத்தம்மா - இப்பாரினில்
உன்னுடன் நாமிருந்த பொழுதுகள்
இன்பத்தை அள்ளிச் சொரிந்ததே - இன்று
துன்பம் மட்டுமே எம்மில் குடிகொண்டிருக்கிறதே
உன் பிரிவின் வேதனையால் எம்மனம் ரணமாகின்றதே - தயா
நீர்க்குமிழி வாழ்க்கைதான் விதியம்மா
யார்க்கும் இதில் மாற்றம் இல்லையம்மா - ஆனாலும்
துளிர்த்திடுவாய் மீண்டும் தரணியிலே - கை
கோர்த்திடுவாய் எம் கூண்டுக்குள்ளே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உன் பிரிவால் வாடும்:
அன்பிற்கினிய கணவர் சபாநாதன், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
'லஷ்மி', 17, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'லீக்' முறையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறுகின்றது.

முதல் நாள் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென்.றோக் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

## காரைநகர் நண்பர்கள் வி.க. நடத்தும் 20-20 மென்பந்தாட்டம் இறுதிக் கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 16

காரைநகர் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 20-20 மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

காரைநகர் குட் பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் - காரைநகரிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக் கிடையே கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதியில் இருந்து 20-20 மென்பந்தாட்ட நெடுந்தொடரை நடத்தி வருகிறது.

இத்தொடரில் பங்குகொண்ட அனைத்து அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு அணியும் தமது பிரிவில் உள்ள ஏனைய அணிகளுடன் இரு தடவைகள் மோதின. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் அணிக்கு 5 புள்ளிகள் வழங்கப்பட்டன. 5 விக்கெட்டுகளாலேயோ அல்லது 50 ஓட்டங்களாலேயோ வெல்லும் அணிக்கு 2 புள்ளிகள் போனஸ் புள்ளிகளாகக் கிடைத்தன.

வெற்றி பெறும் அணி போனஸ் புள்ளிகளைப் பெறத்தவறும் பட்சத்தில் தோற்கும் அணிக்கு ஒரு புள்ளி போனஸ் புள்ளியாக வழங்கப்பட்டது. தனிநபர் எடுக்கும் கட்ரிக் -5 விக்கெட்டுகள் மற்றும் 50 ஓட்டங்களுக்கு தலா அரைப் புள்ளி போனஸாக வழங்கப்பட்டது. இதனடிப்படையில் இரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா இரு அணிகள் அரை இறுதிக்குத் தகுதி பெற்றன. அரை இறுதி அணிகள் மீண்டும் தமக்குள் இரு தடவைகள் மோதின. புள்ளிகள் அடிப்படையில் 3 ஆம் 4 ஆம் இடத்தைப் பெற்ற அணிகள் தமக்குள் மோதின. இதில் வென்ற இளஞ்சோலை விளையாட்டுக் கழகம் 3 ஆம் இடத்துக்கான கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

1 ஆம் 2 ஆம் இடங்களைப் பெற்ற கோவளம் விளையாட்டுக்கழகமும் ஒளிச் சுடர் விளயாட்டுக்கழகமும் மூன்று இறுதிப் போட்டிகளில் மோதக் காத்திருக்கின்றன. இந்த மூன்று போட்டிகளில் குறைந்தது இரண்டு போட்டிகளில் வெற்றி பெறும் அணி 1 ஆம் இடத்துக்கான கிண்ணத்தையும் - தவறும் அணி 2 ஆம் இடத்துக்கான கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொள்ளும். ஆட்டத் தொடர் நாயகன் விருதுக்கும் பெரும் போட்டி நிலவுகிறது. (1)

## அராலி பாரதி வி.கவின் உதைபந்தாட்டம்; யங்ஹென்றீஸ் இலகுவான வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 16

அராலி பாரதி விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திய 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அராலி துணைவி சென்.ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் சற்றுப் போட்டியாக விளையாடியமை ரசிகர்களிடையே சற்று உற்சாகமாகக் காணப்பட்டது. முதல் கோலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம் பெற்ற போதிலும் இதற்குச் சமனாக சென். ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கோலைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இந்நிலை நீடிக்காது யங்கென்றீஸ் இரண்டாவது கோலையும் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் 2:1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ரசிகர்கள் எதிர் பார்த்த விறுவிறுப்பை ஏற்படுத்தாது மேலும் 3 கோல்களை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம் 05:01 கோல்கள் என்ற அடிப்படையில் சென். ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் அராலி ஏ.எல்.விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றது. (1-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# வலி.வடக்கு இளைஞர் கழக தடகளப் போட்டியில் மல்லாகம் சன்மார்க்கம் கேடயத்தைச் சுவீகரித்தது

வலி.வடக்கு, ஜூன். 16

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வலி.வடக்கு தெல்லிப் பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இளைஞர்கழகங்களுக்குஇடையே நடத்தப்பட்ட தடகள மற்றும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று, மல்லாகம் சன்மார்க்க இளைஞர் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம் பெற்றன.

தடகள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளின் விவரங்கள் வருமாறு:

**20 வயது பிரிவு - ஆண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்:* மதுஷாந் (பாரதிதாசன்), சி.திருமாவளவன் (இளங்கதிர்), வாஷிங்டன் (வெண்புறா)

*200 மீற்றர் ஓட்டம்:* சஜீவன் (விநாயகர்), ப.மதுசாந் (பாரதிதாசன்)

*400 மீற்றர் ஓட்டம்* - ஜெ.சஜீபன் (விநாயகர்), கு.துசிகரன் (விநாயகர்), சி.மதீசன் (விநாயகர்).

*800 மீற்றர் ஓட்டம்:* சி.மதீசன் (விநாயகர்), ஜெ.சஜீவன் (விநாயகர்)

1500 மீற்றர் ஓட்டம் : செ.நவநீதன் (விநாயகர்).

*10,000 மீற்றர் ஓட்டம் :* தி.புருசோத்மன் (கணேசன்), அ.பிரதாப் பிரகலாதன் (கணேசன்).

*நீளம் பாய்தல்:* சி.திருமாவளவன் (இளம்கதிர்), க.விமேஸ்குமார் (விநாயகர்), சி.மதீசன் (விநாயகர்)

*உயரம் பாய்தல் :* சி.கமலமோகன் (கணேசன்), க.விமேஸ்குமார் (விநாயகர்).

*முப்பாய்ச்சல்:* தி.திருமாவளவன் (இளங்கதிர்), க.விமேஸ்குமார் (விநாயகர்).

*தட்டெறிதல் :* இ.இராஜகாந்தன் (கணேசன்), க.சுகிர்தன் (சன்மார்க்கம்), சி.சொரூபன் (கணேசன்).

*ஈட்டி எறிதல்:* சுகிர்தன் (சன்மார்க்கம்), ஜெ.வசீதரன் (பாரதிதாசன்), செ.நவநீதன் (விநாயகர்).

*5000 மீற்றர் வேக நடை :* யே.ஜெயறோகன் (வெண்புறா), தி.புருசோத்மன் (கணேசன்), ரு.துசிகரன் (விநாயகர்).

*அஞ்சலோட்டம் 4 × 100 மீற்றர்:* அளவெட்டி விநாயகர் இளைஞர் சேவைகள் மன்றம், மல்லாகம் சன்மார்க்க இ.சே.மன்றம், இளவாலை வெண்புறா இ.சே.மன்றம்.

*4 ×400 மீற்றர் :* அளவெட்டி விநாயகர் இ.சே.மன்றம், மல்லாகம் சன்மார்க்க இ.சே.மன்றம், அளவெட்டி பாரதிதாசன் இ.சே.மன்றம்

**20 வயதுப் பிரிவு - பெண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்:* த.பிரதீபா (வெண்புறா), ந.தனுசா (கணேசன்)

*200 மீற்றர் ஓட்டம்:* ந.தனுசா (கணேசன்), த.பிரதீபா (வெண்புறா).

*400 மீற்றர் ஓட்டம் :* செ.றஜிமாலா (திருவள்ளுவர்), க.துயவதனி (திருவள்ளுவர்)

*800 மீற்றர் ஓட்டம் :* சி.சிவமதி (பாரதிதாசன்).

*நீளம் பாய்தல் :* த.பிரதீபா (இளஞ்சுடர்), த.சிந்துஜா (இளஞ்சுடர்).

*தட்டெறிதல் :* க.சேதுப்பிரியா (கணேசன்), த.சிந்துஜா (இளஞ்சுடர்), சி.பரிதா (திருவள்ளுவர்)

*ஈட்டி எறிதல்:* க.சேதுப்பிரியா (கணேசன்), சி.ஜெயந்தினி (கணேசன்).

*குண்டெறிதல்:* க.சேதுப்பிரியா (கணேசன்), த.சிந்துஜா (இளஞ்சுடர்), சி.ஜெயந்தினி (கணேசன்).

*3000 மீற்றர் வேகநடை:* அ.றஜிமாலா (திருவள்ளுவர்), சி.பரிதா (திருவள்ளுவர்), ம.சுபாஜினி (திருவள்ளுவர்).

*(வளரும்)*

## சாதனை படைத்த கழகங்கள்



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப் பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மோதிய மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தினரும் ஆனைக்கோட்டை கலையொளி விளையாட்டுக் [illegible] னரும் அரச அதிபர், மாவட்ட விளையாட்டு அலுவலர், பிரதேச [illegible] ஆகியோருடன். (1-86)



இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் 50 ஆண்டு நிறைவு விழாவையொட்டி 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்துச் சுற்றுப் [illegible] நிலைய இயக்குநருடன். (1-86)



பருத்தித்துறை இலங்கை வங்கியின் பொன்விழாவை யொட்டி புத்தாண்டு நிகழ்வாகப் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அனுசரணையுடன் நடத்தப்பட்ட மென் பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனான கரவெட்டி ஞானம் விளையாட்டுக் கழகத்தினர் விருந்தினர்களுடன். (1-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலய மட்ட புத்தாக்கப் போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட மட்டத்திற்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.கல்வி வலயத்தில் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவானவர்களின் விவரங்கள் வெளி யாகியுள்ளன.

மாவட்ட மட்டப்போட்டிகள் ஜூலை மாத நடுப் பகுதியில் இடம்பெறும் என்று வட மாகாணத்திற்கான புத்தாக்குனர் கழக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்டமட்ட போட்டிக்கு தெரிவானோர் மற்றும் ஊக்குவிப்புப் பெறுவோர் விவரம்:

*கனிஷ்ட பிரிவு (தரம் 6-9) :* பானுஜா திரவிய நாதன் (தரம் 8) - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பி.டினேசன் (தரம் 8) - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஜெ.வோல்டர்ஜெரா பிரசாந்த் (தரம் 8) - சென்ஜோன்ஸ் கல்லூரி.

*கனிஷ்ட பிரிவில் ஊக்குவிப்புப் பெறுவோர்:* டி.தர்சாந்தன் (தரம் 8) - சென்ஜோன்ஸ் கல்லூரி, பி.ரினுகாந்த் (தரம் 6) - சென்பற்றிக்ஸ் கல்லூரி, கெ.ரஜீவன் (தரம் 8) - கனகரத்தினம் ம.ம.வி, அ.டனிஸ்குமார் (தரம் 9), ம.கனிஸ்ரன் (தரம் 9) - சென்ஜேம்ஸ் ம.வி, சி.சிவமைந்தன் (தரம் 8), ஜி.ஏபிரஹாம் அனோஜன் (தரம் 8), என்.மதுசன் (தரம் 8), எஸ்.சுபன் (தரம் 8) - சென்ஜோன்ஸ் கல்லூரி.

*சிரேஷ்ட பிரிவு தரம் (10 -13) :* த.கடோற்கசன் (தரம் 13) - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சோபிதா கமலராஜா (தரம் 10 - சிக்கன உமி அடுப்பு) - சுண்டுக் குளி மகளிர் கல்லூரி, சோபிதா கமலராஜா (தரம் 10 - கடல் நீரை நன்நீராக்கல்) - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

*சிரேஷ்ட பிரிவில் ஊக்குவிப்புப் பெறுவோர்:* எம்.அன்டன்ராஜ் (தரம் 12), வி.எ.ஷெரோன் (தரம் 12) - சென்பற்றிக்ஸ் கல்லூரி, சிந்துஜா விஜயராஜா (தரம் 11) - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கு.மோகனக்கிருஸ்ணா (தரம் 12) - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பி.நதீசன் (தரம் 11) - சென்ஜோன்ஸ் கல்லூரி, நா.விமலேந்திரா (தரம் 12), பா.பாலகிரிசன் (தரம் 12) - யா/கொக்குவில் இந்துக்கல்லூரி. (202)


## கண்ணீர் அஞ்சலி

எமது இசைக்கல்லூரியின் வளர்ச்சிக்கு
உறுதுணையாக விளங்கிய

**சமூகஜோதி கா.கணேசதாசன்**

அவர்களின் பிரிவால் துயரடைகின்றோம் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

54 விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

கீதவாஹினி
இசைக்கல்லூரிச் சமூகம்
(75335)



## பரீட்சை முடிவுகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய குருகுல கலாசாலையில் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் யாவும் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை எடுத்த மாணவர்கள் குருகுல காரியாலய நேரத்தில் தங்கள் சுட்டெண்களுடன் வருகை தந்து பார்வையிடலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம்.
(75338)





## IIS
## Special Online Classes

விசேட Online வகுப்புக்கள் மூலம் மிகக்குறுகிய காலத்தில் Diploma கற்கை நெறிகளை முடித்துக்கொள்ளும் வாய்ப்பினை IIS ஏற்படுத்தி தருகின்றது.

ஆரம்பம்
23-06-2008
(பகல் 10.00மணி)

| Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | 2 Months |
| Diploma in Internet Technology | 2 Months |
| Diploma in Desk Top Publishing | 2 Months |

ஓர் பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கபடுவர் உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கபடுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P :- 021 222 2831



## மனமார வாழ்த்துகின்றோம்



**பொன்னம்பலம் சூரசங்காரன்**

மல்லாகம் நீதிநிர்வாக மாவட்டத்தில் ஒரு சமாதான நீதிவானாக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டு, 13.06.2008 மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.

இவர் பணிப்புலம் பண்டத்தரிப்பில் எல்லோரும் பாராட்ட சமூக நலப் பணிகள் மேற்கொண்டிருந்தார். இனிமேல் சமாதான நீதிவானாகவும் இவர் மேலும் பல பணிகள் செய்ய மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
முத்துமாரி புடைவை அன்ட் பான்சி பலஸ்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு. (75331)


# தமிழகம் சென்ற நால்வர் மீது விசேட முகாமில் விசாரணை

ராமேஸ்வரம்,ஜூன்16

யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரியில் இருந்து தமிழகம் வந்து அகதிமுகாமில் தங்கியிருந்த நால்வர் மண்டபத்தில் உள்ள விசேட அகதி முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பெண் குழந்தை உட்பட இந்த நால்வரும் உரிய ஆவணங்களுடன் தமிழகம் வந்து அகதி முகாமில் பதிவுகளை மேற்கொண்டு அங்கு தங்கியிருந்தனர்.

இவர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அவர்களை விசேட முகாமுக்கு பொலிஸார் இடம்மாற்றியுள்ளனர்.

அகதிகள் என்ற போர்வையில் இவர்கள் தமிழகத்துக்குள் ஊடுருவியிருக்கிறார்களா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-1)


## பிரத்தியேக வகுப்புக்கள்

2009, 2010

- Logic
- Drama & Theatre
- Hinduism

தனிப்பட்ட முறையில் போதிய பயிற்சி வழிகாட்டல்களுடன் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **பா.கோபி** B.A (Hons),
*348, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு,*
(Yarl hospital *முன்பாக) யாழ்ப்பாணம்.*
0776078493 (75336)



## கோழிக்குஞ்சு விநியோகம்

BIHIRA புறொயிலர் குஞ்சுகள் 16.06.2008 (திங்கட்கிழமை) விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- **றாஜீவ்** - *நவாலி வீதி ஆனைக்கோட்டை*
- **சிற்றி பாம் றேடர்ஸ்** - *கல்வியங்காடு*
- **P.ரவி** - *தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி*
- **மதுரா** - *ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்*
- **திருமகள் களஞ்சியம்** - *சிவலிங்கப் புளியடி*

(75323)




## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்16

உரும்பிராய் ஒடயம்பதி கற்பக விநாயகர் ஆலய பெருந் திருவிழாவில் நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

வடமராட்சி,ஜூன்16

புலோலி, மந்திகை, வில்லிப்பாதி முருகன் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் அலங்காரத் திருவிழா நிறைவுறும். (203-236)

* * *

வடமராட்சி,ஜூன்16

வல்வெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-236)

* * *

வடமராட்சி,ஜூன்16

அல்வாய் கிழக்கு வெள்ளுருவை ஞானவைரவர் கோயில் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வளந்துப் பொங்கலுடன் ஆரம்பமாகி மறுநாள் 21ஆம் திகதி சனிக்கிழமை வேள்விப் பூசையுடன் நிறைவுறும். (203-236)

* * *

மந்திகை,ஜூன்16

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-212)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்16

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

993 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 36 40 44 53

13-06-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5753154 - 5768378

ஜக்பொட் பரிசு ரூபா. 1,743,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,161 | 10/- | 3,381,610/- |
| இலக்கங்கள் | 31,029 | 20/- | 620,580/- |
| 1 இல. + லக்கினம் | 30,633 | 30/- | 918,990/- |
| 2 இல. + லக்கினம் | 2,831 | 100/- | 283,100/- |
| 3 இலக்கங்கள் | 824 | 500/- | 412,000/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,743,950/- | - |
| மொத்தம் | | | 6,391,280/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,562 | | 6,891,280/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,499,000/-

தொடர் இலக்கம் 4866695 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 5753304-9-24 |
| குருநாகல் | 5756007-0-78 |
| ஹம்பாந்தோட்டை | 5757125-4-13 |
| காலி | 5764173-5-22 |
| கம்பஹா | 5767207-2-04 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## மாபெரும் தள்ளுபடி விற்பனை

SATS-TECH நிறுவனம் யாழ். நகரில் இல.10/11, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடை சந்தி) விற்பனை நிலையத்தை இன்று (16.06.2008) திறந்து வைக்கிறது. இதனை முன்னிட்டு 30.06.2008 வரை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுக விலையில்!

| DISH TV package I | package II | package III |
|---|---|---|
| MAXI 3 மாதம் அல்லது Freedomplus 6 மாதம் இலவச பக்கேஜ் ரூபாய் 8250/= | MAXI 5 மாதம் அல்லது Freedomplus 12 மாதம் இலவசம் :- ரூபாய் 10250/= | MAXI 11 ½ மாதம் அல்லது Freedomplus 18 மாத இலவசத்துடன் ரூபாய் 13500/= |

dishtv



★ மற்றும் டிஸ் TV க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்.
★ அனைத்து கேபிள் TV உபகரணங்களும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்.

மேலதிக விவரங்களுக்கு:
SATS-TECH ENGINEERS
இல.10/11 ஸ்ரான்லி வீதி, (மிட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம்.
இல.182,கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேச் அருகில்,கொக்குவில்.
Phone :- 021-222 5908


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தெற்கில் முற்றுகிறது பொருளாதார நெருக்கடி

அரசோ போர்த் தீவிரத்தில். மக்களோ பொருளாதார நெருக்கடியில். நாடோ நடு வீதியில்.

'நல்லாட்சிக்கான நம்பிக்கைகள் இடிந்து, நாடு நலிவுற்று, இனிக் குழப்பமே நீடிக்கும் என்பதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

அரிசி, மா, சீனி, பால்மா, எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தினதும் விலைகள் கண்மண் தெரியாமல் எகிறிவிட்டன.

விலைவாசி உயர்வு ஒருபுறம். பணவீக்கம் மறுபுறம். ஆனால் பொதுமக்களின் வருமானத்தில் அதிகரிப்பு இல்லை. சம்பள உயர்வு இல்லை.

இதனால் 'வரவு எட்டணா; செலவு பத்தணா, கடைசியில் துந்தணா' என்று அங்கலாய்த்து அல்லாடும் நிலைக்கு சாதாரண குடும்பங்கள் தள்ளப்பட்டிருக்கின்றன.

அரசின் போர்வெறித் தீவிரம் ஒரு பக்கத்தில் நாட்டின் வளத்தைக் கபளீகரம் செய்கின்றது என்றால் மறுபக்கத்தில் ஊழலும், லஞ்சமும், தவறான நிதிக் கொள்கைகளும், பிழையான அரசாட்சியும் சேர்ந்து நாட்டின் வருமானத்தை விழுங்கி ஏப்பம் விடுகின்றன.

பொறுப்பற்ற ஆட்சியின் விளைவு பொருளாதாரத்தை முடக்க, சமூகத்தின் எல்லா மட்டங்களில் இருந்தும் அதிருப்தியும், எதிர்ப்பும், ஆட்சேபனையும், கண்டனமும், விசனமும் பீறிட்டு எழத் தொடங்கியிருக்கின்றன.

நாட்டையும் மக்களையும் வழிப்படுத்தும் ஆசான்கள் தங்களின் குடும்பங்களின் வயிற்றுப்பாட்டைச் சமாளிக்க முடியாததால் வீதிக்கு இறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக இரண்டு நாள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கப் பாடசாலை ஆசிரியர்கள் தயாரானதும் கடந்த வாரம் இரண்டு நாள்கள் அரச பாடசாலைகளை இழுத்து மூடவேண்டியதாயிற்று அரசுக்கு.

தங்களுடைய சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏப்ரல் 30 ஆம் திகதிவரை ஆசிரியர்கள் இப்போது அரசுக்குக் காலக்கெடு விதித்திருக்கின்றார்கள்.

இதேவேளை, சகல அரச சேவைகளிலும் இருக்கும் பட்டதாரிகள் தங்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக்கோரி கடந்த வாரம் வீதிக்கு இறங்கினார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவு செய்வதற்கு அவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அரசுக்குக் கால அவகாசம் அளித்திருக்கின்றார்கள்.

விவசாயிகளின் உரமானியம் விலக்கப்பட்டமையை ஆட்சேபித்து இலங்கை கமநல சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. அரசு தங்களது வயிற்றில் ஒட்டுமொத்தமாக அடித்து விட்டது என்பதைப் பிரதிபலிப்பதற்காக இந்நிகழ்வில் கலந்துகொண்ட விவசாயிகளும் அவர்களின் நலன்விரும்பிகளும் கறுப்பு நிறத்தில் கச்சை மட்டும் அணிந்து களத்தில் இறங்கினர்.

இதேசமயம், பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்களும் தங்களின் சம்பளப் பிரச்சினையை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்க முஸ்தீபு செய்து வருகின்றார்கள். சுமார் ஆயிரத்து ஐந்நூறு உதவி மற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் திட்டமிட்டபடி ஒரே சமயத்தில் சுகவீன விடுமுறையில் குதிப்பார்களாயின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வைத்தியசாலைகள் எல்லாம் செயலிழந்துவிடும்.

இதேவேளை, நீதியான சம்பள உயர்வு கேட்டு நீதிபதிகள், நீதிவான்கள் போன்றோர் கூட அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து உயர்நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கின்றார்கள். அரசுக்கு எதிராக வழக்குப் போட்டிருக்கின்றார்கள். அவர்களது கோரிக்கை பரிவோடு பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு பிரதம நீதியரசர் உட்பட்ட உயர் நீதிமன்ற ஆயத்திடம் தொனிப்பதையும் உணரக்கூடியதாகவிருக்கின்றது.

இதற்கிடையில், நாட்டின் பொருளாதாரத் தேரின் சக்கரம் காற்றுப்போன நிலையில், அதை முன் கொண்டு நகர்த்த முடியாமல் அல்லாடும் அரசு, தனக்குப் பெரும் நிதிப் பொறுப்பை சுமத்துகின்ற இலங்கை மின்சார சபையை மெல்லத் தனியார் மயப்படுத்தி, தனது பொறுப் பிலிருந்து கழற்றிவிடவும், அந்த நிதிச் சுமையை அதன் மூலம் - தனியார் நிறுவனக் கட்டமைப்பு வாயிலாக - மக் கள் மீது சுமத்தவும் உள்நோக்கம் கொண்டு காய்களை நகர்த்துவதாகக் கூறப்படுகின்றது. இதற்கு எதிராக உஷாரடைந்து கிளம்பியுள்ள இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மற்றும் அனைத்துத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கை மின்சாரசபையை தனியார் மயப்படுத்த விடமாட்டோம் எனச் சூளுரைத்து அதற்காகப் போர்க்கொடி தூக்கி வீதிக்கு இறங்கியிருக்கின்றார்கள்.

பொருளாதார நெருக்குவாரங்களுக்கு எதிராகத் தென்னிலங்கைச் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் இப்படி அதிருப்தியும் எரிச்சலும் ஆட்சேபனையும் எழும் அதேசமயம், இந்த விடயங்களை வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராகப் பெரும் மக்கள் எழுச்சியையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தப் பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.க., ஜே.வி.பி. போன்றன தனித்தனியாகக் களத்தில் குதித்திருக்கின்றன. அடுத்த மாத முற்பகுதியில் நாடளாவிய பொது வேலை நிறுத்தம் ஒன்றுக்கு எதிரணிகள் அழைப்பு விடும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

ஊடகங்களை அடக்கி, அதன் மூலம் உண்மைகளை மறைத்து, யுத்த களத்தில் வெற்றி மீது வெற்றி குவிவதாகப் பொய்ப்படம் போடுவதன் வாயிலாக, தென்னிலங் கையில் முற்றி வெடிக்கத் தயாராகும் பொருளாதார நெருக் கடிப் பிரச்சினையை அரசால் சமாளிக்கக் கூடியதாக இருக் குமா என்பதை வரும் வாரங்கள் நமக்குக் கோடி காட்டும் என எதிர்பார்க்கலாம்.

# ஐரோப்பிய யூனியன் எச்சரித்தாலும் வர்த்தக உறவை துண்டித்து விடாது

## நம்பிக்கை தெரிவிக்கிறார் அமைச்சர் பீரிஸ்

லண்டன், ஜூன் 16

இருதரப்பு வர்த்தக உறவுகளை புதுப்பிப்பதற்கு மனித உரிமை மீறல்கள் இடையூறாக இருக்கப் போகின்றன என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை எச்சரித்துள்ளது என்று இலங்கையின் வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேசமயம் அமைச்சர், வெளிநாட்டு வருமானம் அபரிமிதமாக வளர்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

புடைவை, தேயிலை மற்றும் உல்லாசப் பயணத்துறைகளில் இலங்கையின் பொருளாதாரம் கடந்த வெகு காலமாக பெரிதும் தங்கியிருந்துள்ளது. குறிப்பாக உடுபுடைவைகள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமே பிரதானமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்துடனான புடைவை வர்த்தகம் ஒக்டோபர் மாத இறுதியில் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ரொயிற்றர் நிறுவனத்துடனான தொலை பேசிப் பேட்டியொன்றில் வர்த்தக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகையில்:

மனித உரிமை குறைபாடுகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஆனால் வர்த்தக உறவுகள் துண்டிக்கப்பட்டு விடும் என்ற வகையில் எதுவும் தெரிவிக்கவில்லை - என்றார்.

எமது கோரிக்கைகளை ஒன்றாக முன்வைப்பதற்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து வருகிறார்கள். குறைபாடுகள் காணப்படும் விடயங்கள் எவை எவை என்று சுட்டிக்காட்டி அவைகளில் கவனம் செலுத்தும்படி எமக்கு ஆலோசனை கூறிவருகிறார்கள். மனித உரிமைகள் பற்றியும், சட்டத் தண்டனையிலிருந்தும் பாதுகாப்பளிக்கும் கலாசாரம் என்று அவர்கள் கூறும் விடயங்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். புடைவை ஏற்றுமதி தடைபடுமானால் அத்துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்- என்று அமைச்சர் பீரிஸ் கூறினார்.

### மனித உரிமை மீறல் ஐரோ.பெரும் கவலை

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மிகுந்த கவலை கொண்டிருப்பதாக ஐரோப்பிய யூனியன் கடந்தவாரம் கூறியிருந்தது. சர்வதேச அலுவலர்களுக்கு வீசா வழங்குவது உட்பட மனித நேய உதவிகளுக்குவிதிக்கப்படுகின்ற தடைகள் நீக்கப்படாவிட்டால் இலங்கைக்கான 70மில்லியன் யூரோ உதவி முடக்கப்பட்டுவிடும் என்று யூனியன் தெரிவித்திருந்தது.

இலங்கையில் ஆள் கடத்தல்கள், கொலைகள், மற்றும் சித்திரவதை போன்றவற்றைத் தடுப்பதற்கு அரசு எதுவும் செய்யவில்லை என்று ஐரோப்பிய யூனியன் இலங்கை அரசாங்கத்தைக் குறை கூறியுள்ளதுடன் இதே விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், ராணுவம் உரிமை மீறல் விடயத்தில் இப்பொழுது தனது போக்கில் திருத்தங்களைச் செய்து கொண்டு வருகின்றது என்றும் கூறினார். ஆள் கடத்தல்கள் தொடர்பாக விமானப்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு வர்த்தகத்துறையில் கடந்த வருடம் 115% அதிகரிக்கப்பட்டள்ளதாகவும் குறிப்பாக சீனா, இந்தியா நாடுகளிலிருந்து முதலீடு அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

(ப)

# வளர்ச்சிப் பணிகளைத் தொடர்வதற்கு உலக வங்கி 900 மில். டொலர் உதவி

உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர்கள் கூட்டம் ஒன்றில் இலங்கைக்கு உதவி வழங்கும் நிலைப்பாட்டின் மீது 900 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடன் உதவியாக வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உள் கட்டுமான வளர்ச்சி, பின்தங்கியுள்ள பகுதிகள் மற்றும் உயர் மட்ட சேவை வழங்கல் போன்ற துறைகளுக்காக இந்த கடன் வழங்கப்படவிருக்கின்றது. 2008 ஜூலை தொடக்கம் 2011 ஜூன் வரையிலான காலப் பகுதிக்கு இந்தக் கடன் வழங்கப்படுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வறுமை ஒழிப்புத் துறையில் இலங்கை அடைந்துள்ள மெச்சத் தகுந்த அளவு முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அதனை நீடிக்கச் செய்வதற்காக இந்த உதவி வழங்கப்படுவதாக உலக வங்கி அறிக்கையொன்றில் கூறியுள்ளது என்று உலக வங்கியின் வதிவிட பணிப்பாளர் நாஓகோ இஷி கூறினார்.

ஏழ்மைக்குள்ளான, குறைந்த அளவில் உதவி வழங்கப்பட்ட பகுதிகளால் சாத்தியமான அளவு வளர்ச்சியைக் காண்பதற்காக இந்த உதவி திட்டமிடப்பட்டுள்ளது. மோதல்கள் இடம்பெறும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களும் இதில் அடங்கும் என்று இஷி கூறினார்.

மூன்று குறிக்கோள்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் வீதி களைப் புனர் அமைப்பதற்கு உதவுதல், நீர்ப்பாசன அமைப்புகளை சீர் செய்தல், மற்றும் தண்ணீர் வழங்கல் இரண்டாவது முதலீட்டு சூழ்நிலையை மேம்படுத்துவது மற்றும் தனியாரை முதலீட்டும் வளர்ச்சித் துறைகளில் அக்கறை கொள்ளச் செய்வது மூன்றா வது கல்வி, சுகாதாரம், சமுதாய பாது காப்பு வலையமைப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாது காப்புப் போன்ற அம்சங் களை மேம்படுத்துவதும் இத்துறை களில் சேவைத் தரங்களை உறுதிப்ப டுத்துவதும் பொறுப்பேற்க செய்வது மாகும்.

இத் திட்டம் செயற்படும் காலத்தில் வளங்களின் கணிசமான அளவு மாகாண வீதிகளை வேகமான வளர்ச்சிப் பணிகளுடன் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# வாய்ச் சொல்லால் மட்டுமின்றி உள்ளத்து உணர்வாலும் எல்லோராலும் அம்மாவாகப் போற்றப்பட்டு வந்த சிவத்தமிழ்ச்செல்வி

துர்க்காதுரந்தரி எனப் போற்றப் படும் திருவாட்டி தங்கம்மா அப்பாக் குட்டி



அம்மையார் ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெற்றவராவார்.

திருக்கோயில் முகாமை என்பது ஆண்களுடன் மாத்திரமே இணைத்துப் பேசப்பட்டு வருவதொன்று. அருளொளி பரப்பிலும் பார்க்க அதிகார ஒலிபரப்பிலேயே சம்பந்தப் பட்டிருந்த ஒரு பதவியினை தனது அடக்க முடமை சார்ந்த தூரதிருஷ்டியினாலும் ஆழமான இறை விளக்கத் தெளிவினாலும் ஒரு பெரும் சமூகப்பணியாக மாற்றிக் காட்டியவர், இப் பெருமாட்டி..

குடாநாட்டில் சமூக வாழ்க்கைக்கான ஒரு மையமாகவும் நிஜமான அறிவா லயமாகவும் ஆக்கப்பட்டமை இத்திருவாட்டியின் மௌன சாதனைகளில் ஒன்று. மக்கள் சேவையை தெய்வப் பணியாக்க நடைமுறை பலவற்றை யாழ்ப்பாணத்தில் தொடங்கி வைத்த பெருமை இவரையே சாரும். ஆசிரியையாகத் தமது வாழ்க்கையைத் தொடங்கியவர். சமய இலக்கிய பேராசிரியராக பரிணாமம்பெற்று நிறைவாக பெண் தெய்வ வழிபாட்டுத் தலமொன்றினை சமூக சேவைத் திருத்தலமாக்கிய பெருமை இவரைச் சாரும். இவரின் பெருமைக்கு அத்தாட்சியாக நான் கொள்ளும் ஒரேயொரு சம்பவம் அக் கோயிலிருந்து திருடப் பெற்ற பொன்னும், வெள்ளியும் மீண்டும் அக்கோவில் திருச்சுற்றுக்குள்ளேயே கொண்டு வந்து விடப்பட்டனவாகும்.

**முதுபெரும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக் கோயில்கள் வரலாற்றில் இடம்பெற்ற ஏறத்தாழ ஒரு பொது நிகழ்ச்சி இந்தக் கோயிலைப் பிரிநிலைப்படுத்திக் காட்டுவதற்கான சம்பவமாக மாற்றியமைக்கான உளவியற் காரணிகளை ஆழமாக உற்று நோக்கல் வேண்டும்.

இதுமாத்திரமல்ல இந்த அம்மையாரது ஆளுமையில் இன்னொரு பரிமாணம், பெண் சிறார்களுக்கான காப்பகத்தை நடத்தி வந்துள்ளமை ஆகும். முகாமையாளர் என்ற அதிகார முத்திரை உடனல்லாது பெறாத் தாய் என்ற பேற்று நிறைவுடன் தாயினும் சாலப்பரிந்து வாழ்ந்த அந்த வாழ்வு சமகால நிறுவனங்களிற்கு மாத்திரமல்ல வருங்காலத்திற்குமான உதாரணமாகும்.

மனித வாழ்க்கையில் இருந்து நான் படித்துக் கொண்ட பெரும் பாடம் நாம் கொடுக்குமளவுக்கு தகவே பெற்றுக் கொள்வோம். திருவாட்டி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் எல்லோருக்கும் அம்மாவாக வாய்ச்சொல்லால் மாத்திரமல்ல உள்ளத்து உணர்வாலும் போற்றப்பட்டதற்கான ஊற்று அவர் வழங்கியுள்ள வற்றின் அன்புப் பாரமும், அறிவு ஆழமும் ஆகும். ✱

## நாளை

| | |
|---|---|
| ஆனி 03 | 17.06.2008 செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தசி மு.இ. 09.43 |
| நட்சத்திரம் : | அனுஷம் பி.ப. 01.35 வரை |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம் : | 02.53 - 04.23 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசன் தாள் சென்றனையோ...!



தேனொடு அமுதும்சேர செழுங்கனிச்சாறு சொட்ட
வானவர் வியந்துகேட்க வையகம் வியந்துபோற்ற
நானலம்மிக்க எங்கள் நாவலர் வழியில்நின்று
ஆனது அனைத்தும்செய்த அன்னையே போயினையோ?

திக்கற்ற அனாதைகட்கு தீந்தமிழ்த் தாயுமானாய்
வக்கற்றோர் வாழ்வதற்கு வழிபல வகுத்துத்தந்தாய்
மக்கட்கு செய்யும்சேவை மகேஸ்வரன் சேவையென்ற
பக்தியில் சிறந்ததாயே பரமன்தாள் சென்றனையோ?

தங்கம்மா என்றால்தொண்டு தங்கம்மா என்றால்பக்தி
தங்கம்மா என்றால்துர்க்கை தந்தபேர் அருளின்வித்து
எங்கம்மா எங்கள்அம்மா என்றுசாற்றிய தமிழைவிட்டு
எங்கம்மா கயிலைசேர்ந்தாள் ஏங்குகிறாள் தமிழ்த்தாய்நொந்து!

மு.திருநாவுக்கரசு (முன்னாள் யாழ்.மாவட்ட நீதிபதி)

# கணனிப் பாதையில் நான் சென்ற தூரம் சொற்பம் என்கிறார் 'மைக்ரோசொப்ட்' அதிபர் பில்கேட்ஸ்

கணனி ஆசிரியர்
கே.ஆர்.சுகுமார்



நாம் முன்னைய காலங்களில் தமிழ், சமயம், அரசியல் போன்ற துறைகளில் சேவையாற்றிய பெரியார்களைப் பற்றி பாடப் புத்தகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம்.

ஆனால் இன்றைய நவீனமயமான உலகத்திலே "தொழில்நுட்பத்திறனையும் அதன் வளர்ச்சியையும் பற்றி அறிந்திருக்க வேண் டியது அவசியமாகும். அந்த வகையிலே சிறு வயதில் இருந்து கணனி மென் பொருள் துறையில் சுயவிடா முயற்சி யினால் முன்னேறி வெற்றி வாகை சூடி உலகக் கோடீஸ்வரர் எனப் பெருமை பெற்ற மைக்ரோசொப்ட் அதிபர் பில்கேட்ஸின் சுவாரி சியமான வாழ்க்கை வரலாற்றைச் சுருக்க மாகப் பார்ப்போம்.

அமெரிக்காவிலே சியாடில் என்ற ஓர் அழகிய அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் நகரில் வாழ்ந்து வந்த வில்லியம் ஹென்றி கேட்ஸ் மேரி தம்பதியினருக்கு மகனாக 1955 - 10 - 28 ஆம் நாளன்று அருந்தவப் புதல்வனாக பிறந்தார். அப்போது தந்தையார் வில்லியம் ஹென்றிகேட்ஸ் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆகவும் தாயார் கல்லூரி ஆசிரியராகவும் கடமையாற்றினார்கள்.

கணனியைப் பில் பிடித்துக் கொண்டானோ அல்லது கணினி பில்லைப் பிடித்துக் கொண்டதோ தெரியாது. இவரிடம் சிறுவயதில் இருந்து அறிவியல், கணிதம் போன்ற துறைகளில் நாட்டம் அதிகமாகக் காணப்பட்டது. சிறுவயதில் பாடசாலையில் முதலாவது மாணவனாக பில் திகழ்ந்ததால் இவர் ஆசிரியர்களின் செல்ல மாணவனாகத் திகழ்ந்தார்.

எட்டாம் வகுப்பில் படிக்கும் போதே கணனி கல்வியில் ஆர்வம் காட்டினான் பில். அக்காலத்தில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகளில் கூடக் கணனி ஓர் ஆடம்பரப் பொருளாக, அனைவருக்கும் எளிதில் எட்டாத ஒரு கருவியாக இருந்தது.

அப்பொழுது அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் (அன்னையர் சங்கம்) மாணவர்களின் நலன் கருதி கணனி நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொண்டது.

இதன் மூலமாகக் கணனியை மாணவர்கள் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர். அப்போது பயன்படுத்திக் கொண்டவர்களில் முக்கியமானவர்கள் பில்கேட்ஸும் அவன் நண்பன் பால் ஆலனும் ஆவர். இவர்களில் பில்கேட்ஸ் எட்டாம் வகுப்பு மாணவனாகவும் பால் ஆலன் பத்தாம் வகுப்பு மாணவன் ஆகவும் இருந்தனர். ஆனால் கணனிக் கல்வியைக் கற்பதில் இருவருக்கும் தணியாத ஆர்வம், தீராத தாகம் இருந்தது. ஆனால் அவர்களின் பாடசாலையில் திறமையான கணனி ஆசிரியர் கூட அப்போது இருக்கவில்லை. இருப்பினும் இரு நண்பர்களும் ஆசிரியர்களே வியக்கும் வகையில் தங்களின் கணனி அறிவை வளர்த்துக் கொண்டார்கள். கணனத் தொழிற்பாடு பற்றிய நூல்களை எல்லாம் ஆர்வமாகத் தேடிப் படித்தார்கள்.

Programming மொழியில் இவர்களுக்கு தனி வெறியே ஏற்பட்டுவிட்டது எனலாம். இதனால் இவர்களுக்கு இரவு, பகல் என்று கிடையாது. பாடசாலை நேரம், விடுமுறை என்று கிடையாது. கடும் பயிற்சியில் இருவரும் ஈடுபட்டனர். நடைமுறை வாழ்வுக்குப் பயன்படும் வகையில் Programming மொழிகளை உருவாக்க பில் ஆர்வம் கொண்டான். சுருக்கமாகச் சொன்னால் கணனியில் இருவரும் புகுந்து விளையாடிப் புதுமைகள் காண விரும்பினர்.

ஆனால் அக்கால கட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் (அன்னையர் சங்கம்) நிதி நெருக்கடி காரணமாக பிள்ளைகளின் பெற்றோர்களிடம் நிதி அறவிட்டு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது மட்டுப்படுத்தப்பட்ட நேரம் வழங்கப்பட்டது. அது பில்லுக்குப் போதுமானதாகக் காணப்படவில்லை.

பாடசாலையில் கணனிக் கல்விக்கு ஆபத்து நேரிட்ட போதும் பில்லும், பாலும் பல்கலைக்கழக இளைஞர்களின் ஸி.ஸி.ஸி நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்கள். இவர்கள் அவர்களைவிடச் சிறியவர்களாகக் காணப்பட்டமையால் இவர்களின் திறமையில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனாலும் பில்லுக்கும், பாலுக்கும் மீண்டும் நீண்ட நேரம் கணனியுடன் உறவாட வாய்ப்புக் கிடைத்தது.

பாடசாலைக் கல்வியை முடித்த பிறகு மேல படிப்பைத் தொடர்ந்து அப்பாவைப் போல வக்கீலாகி விட வேண்டும் என்று குடும்பத்தினரும் உறவினர்களும் வற்புறுத்தினர். ஆனால் பில்லின் ஆழ்மனதில் விதைக்கப்பட்ட கணனி கனவுகள், கணினி Programmingயை சுற்றிச்சுற்றி வந்தன.

பில் 1973 ஆம் ஆண்டில் ஏரிக்கரைப் பாடசாலையில் கடைசி ஆண்டில் படிக்கும் போது ரி.ஆர்.டபிள்யூ (TRW) என்ற நிறுவனம் பிடிபி-10 (PDP - 10) பகுதிகளில் நீர்மின் திட்ட அணைகளின் மின்சார உற்பத்தி பற்றிய தகவல்களைச் சேமித்துக் கொண்டு இருந்தது. ஆனால் பிடிபி - 10 இல் இருந்த பாக்ஸ் என்னும் தொல்லை கணனியை இயங்க விடாது தடுத்தது. பிழை கள் பெருகின. இந்த பாஸ்க் தொல்லையில் இருந்து விடுபடாவிட்டால் நிறுவனத்திற்குப் பேரிழப்பு ஏற்படக் கூடும் என்ற அபாயம் ஏற்பட்டது.

பிழைகளைக் கண்டறிந்து திருத்துவதற்கு அவர்களுக்கு தொழில் வல்லுனர்கள் தேவைப்பட்டார்கள். அப்போது ஸி.ஸி.ஸி. நிறுவனத்திடம் இந்த வாய்ப்பு தேடி வந்தது.

பில்லும் பாலும் அங்குள்ளவர்களைவிடத் திறமையாக நேரகாலம் பாராது வேலை செய்த போதும் அவர்களுக்கு மாணவர்களுக்குரிய கொடுப்பனவே வழங்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் பணத்திற்காக அங்கு **வேலை செய்யவில்லை. கணனியுடன் வேலை செய்யும் வாய்ப்புக்காக பணியை அவர்கள் ஏற்றுக் செய்தனர்.** இதில் அவர்கள் வெற்றி கண்டனர்.

இதன் பின்னர் பாடசாலை இறுதித் தேர்விலும் சிறப்பாக வெற்றி பெற்றார் பில். ஆனால




**சிறுவயதில் சின்னஞ்சிறு அறையில் கணினிகளின் பாகங்களுக் கிடையில் அலுத்துக் களைத்துத் தரையில் படுத்திருக்கும் பில்கேட்சைப் பாருங்கள்.**

பாலு பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டான். மேலும் பில் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க வக்கீல் கல்வியைத் தொடர்ந்தார். எனினும் சிறிது காலத்தின் பின்னர் வக்கீல் கல்வியை அவரால் தொடர முடியாத நிலையில் இடைநிறுத்தினார். அதன் பின்னர் பில்லும் பாலும் ஒரு கணினி நிறுவனத்தை ஆரம்பிப்பது பற்றி கனவு காண்பார்கள். திட்டம் தீட்டுவார்கள், விவாதிப்பார்கள். ஆனால் நிதி நெருக்கடியினால் அவர்கள் திட்டத்தை தள்ளிப் போட்டுவிடுவார்கள்.

ஆனால் அவர்களிடம் ஆசை இருந்தது, ஆற்றல் இருந்தது, அறிவு இருந்தது, அநுபவமும் கூடவேயிருந்தது. காலம் மட்டும் கனியவில்லை.

1974ஆம் ஆண்டு இன்டெல் (Intel) நிறுவனம் புதியதோர் Micro Processorயை அறிமுகம் செய்தது. அதன் Programming பணிக்கு அந்நிறுவனம் பில், பால் ஆகியோரிடமும் உதவியை நாடியது. இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி காண வேண்டும் [illegible] FORTRON, PASCAL போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்ற அவர்கள் BASIC முறையில் Progrmming எழுத ஆரம்பித்தனர்.

ஆனால் இப்பணியை அந்நிறுவனம் இவர்களிடம் மட்டும் ஒப்படைக்கவில்லை. இன்னும் பல நிறுவனங்களிடமும் தனிப்பட்ட குழுக்களிடமும் ஒப்படைத்து இருந்தது.

இதனால் இப்பணியை விரைவாக முடிக்க வேண்டும், பிழையின்றி முடிக்க வேண்டும், மற்றவர்களை முந்திக் கொண்டு முடிக்க வேண்டும், சரியாக முடிக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அல்லாவிட்டால் தமது இரவு பகல் பாராது உழைத்த கடினமான உழைப்பு பயனற்றுப் போய்விடும் என்று எண்ணினார்கள்.

இவர்களின் விடாமுயற்சியினால் எழுதப்பட்ட Programme ஆனது பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. முயற்சி வெற்றி கண்டது. இதனால் மகிழ்ச்சியடைந்த பில்லின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்போது பில்லுக்கு இருபது வயது. இந்த வெற்றியின் திருப்பு முனை அவர்களை உலகறியச் செய்தது.

## கடின உழைப்பின் மூலம் வெற்றிகண்ட மேதை

1977ஆம் ஆண்டு ஆல்புகர்க் நகரின் மிகப் பெரிய அடுக்கு மாடிக் கட்டடத்தின் எட்டாவது மாடியில் ஒரு அறையில் இவர்கள் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

அந்த அறையில் அங்கும் இங்குமாகக் கணனிகள் கிடந்தன. விசைப் பலகைகளில் சில விரல்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அங்கு சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் டைப்பிரைட்டரில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

திடீரென புயல் போல ஒரு பையன் அந்த அறைக்குள் நுழைந்து நிர்வாகியின் அறைக்குள் போய்க் கொணடிருந்தான். ஹலோ... ஹலோ... யாரது? முதலாளி ஊரில் இல்லை என உரக்கக் குரல் கொடுத்தார். ஏனெனில் வெளியார் யாரும் அந்த அறைகுள் நுழையக் கூடாது என்பது உத்தரவு.

அவனோ கதிரையில் அமர்ந்து கணனியில் கவனம் செலுத்த ஆரம்பித்தான. அந்தப் பெண் புதிதாக நியமனம் பெற்றவள். அவள் வேகமாக தனது அலுவலரை நோக்கிச் சென்று சார் யாரோ ஒரு பையன்.. அவள் முடிக்கவில்லை அவர் சிரித்தபடியே பையனா? அவர் தான் இந்தக் கம்பனியின் முதலாளி பில்கேட்ஸ் என்றார்.

அந்தப் பெண்ணின் விழிகள் வியப்பில் விரிந்தன. இருபது வயது இந்தச் சின்னப் பெடியன் இக் கம்பனியின் முதலாளியா? நம்பவே முடியவில்லை? ஆனால் உண்மை அதுதான்.

அமெரிக்காவில் 30 வயதில் கோடீஸ்வரர்கள் வரிசையில் முப்பதுக்குள் நின்று பின்னர் முதலாவது கோடீஸ்வரர் என்ற பெருமையைப் பெற்றார் பில்கேட்ஸ்.

அச்சிறிய கம்பனி "மைக்ரோசொப்ட்" (Microsoft) என்ற பெயருடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தது. இன்று உலகமே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு மைக்ரோ சொப்ட்டின் இயங்கு மென் பொதிகளும், பிரயோக மென் பொதிகளும், புரோகிராம் மொழிகளும், அனைத் துக் கணனிகளிலும் விரும்பிப் பயன்படுத்து வதை அனைவரும் அறிந்ததே.

இவ் வெற்றிக்கு பில்கேட்சின் விடாமுயற்சியும் தன் நம்பிக்கையும் மைக்ரோ சொப்ட் [illegible]ர்களின் அயராத உழைப்பும் [illegible] என்றால் மிகையாகாது. இதனாலேயே மைக்ரோசொப்ட் உலகெங்கும் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தது.

இதற்கிடையில் பில்கேட்ஸ் எந்தக் கல்லூரியிலும் பட்டம் பெற்றவர் அல்லர். அவருக்குப் பட்டப் படிப்போ, பட்டயப் படிப்போ முக்கியமா னதாகத் தெரியவில்லை. கணனி மொழியில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் விடாமுயற்சியும் தன்நம்பிக்கையும் அவரை இன்று உலகம் அறிய வைத்தது.

தனது நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் திறமை மதிப்பிடப்பட்டு திறமைக்கு ஏற்றவாறு ஊக்கிவிப்புப் பரிசில்கள், சம்பள உயர்வு, பதவி உயர்வு, போனஸ் என்பன வழங்கப்பட்டு வருகின்றமை சிறப்பு அம்சமாகும்.

"கடினமாக, தீவிரமாக முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி வேலை செய்ய முடியாதவர்களைச் சரி இந்த இடம் உங்களுக்கு ஏற்றதல்ல" என்று சொல்லி வெளியே அனுப்பி விடுவாராம்.

பில்கேட்சிடம் உள்ள ஒரு நல்ல அம்சம் தொழிலாளர், நிர்வாகி, முதலாளி என்ற இரும்புத் திரைப் பிரிவு வேறுபாடுகள் இல்லை. எல்லோரும் கலந்து பழகலாம், ஆலோசனை வழங்கலாம்.

முப்பத்தைந்து வயதில் தான் திருமணம் செய்து கொள்வேன் என கூறினார். ஆனால் நாற்பது வயது தொடங்கும் போதுதான் திருமண பலனும் கைகூடியது.

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தில் பணியாற்றிய மெலிண்டா ஃபரெஞ்ச் என்ற பெண்ணை நேசிக்கத் தொடங்கினார். கண்டதும் காதல் என்று கொள்ளாது ஐந்து வருடங்களுக்கு மேலாக நெருங்கிப் பழகிய பின்னர் அந்த நட்பு காதலாக மலர்ந்தது.

அவள் பிலகேட்ஸ்சை விட ஒன்பது வயது இளையவள். M.B.A. தொழில் நிர்வாகவியல் படித்தவள். அவள் அழகைவிட அறிவால், உழைப்பால் உயர்ந்தவள். சுறுசுறுப்பானவள், கலகலப்பான இயல்பு உடையவள்.

1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் நாள் (1994-01-01) புது மணவாழ்வில் இணைந்து கொண்டனர். இவர்களுக்கு 1996இல் ஒரு மகனும் 1999ல் ஒரு மகனும் பெண்ணும் செல்வங்களாகக் கிடைத்தன. "ஆசைக்கொரு மகளும், ஆஸ்திக்கு ஒரு மகனும்" என்பதே பலரின் இலட்சியக் கனவு இந்த வகையிலும் பில் கோட்ஸ் மிகவும் கொடுத்து வைத்தவரானார்.

அமெரிக்கக் கொடை வள்ளல்களில் மூன்றாம் இடத்தை வகிக்கும் அவர் கோடீஸ்வரர் வரிசையிலும் மூன்றாவது இடத்தில் இன்று (2008 இல்) உள்ளார்.

தம்முடைய சொத்து முழுவதும் மனைவி மக்களுக்கு ஒதுக்கப் போவதில்லை அவர்களுக்கு வெறும் 5% மட்டுமே. மீதமுள்ள 95% பொது நலத்திட்டங்களுக்கே செலவிடப்படும் என்கிறார் பில்கேட்ஸ்.

"தான் கணனிப் பாதையில் சென்ற தூரம் சொற்பம். செல்ல வேண்டிய தூரம் மிகமிக அதிகம்" என்று கூறுகிறார்.

உலகில் மைக்ரோ சொப்ட் மென்பொருள் மூலம் அன்றும் இன்றும் கொடி கட்டிப் பறக்கும் பில்கேட்ஸ் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதந்து ஒரு மணித்தியாலத்திற்குள் தனது சொந்த விமானத்தில் திரும்பிவிட்டார். ஆனால் இன்று மென்பொருள் துறையில் படிப்படியாக இலங்கை வளர்ச்சி கண்டுவரும் நிலையில் இலங்கை அரசாங்கம் 2009ஆம் ஆண்டை இலங்கையின் **"தகவல் தொழில்நுட்ப ஆண்டாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில்"** உலகப் பிரசித்தி பெற்ற மைக்ரோசொப்ட் கணனி நிறுவனத்தின் அதிபரும், கோடீஸ்வரரும் ஆகிய பில்கேட்சை இலங்கைக்கு வருமாறு விஞ்ஞானம் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவித்தாரன, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கருஜயசூரிய ஆகியோரின் அழைப்பை ஏற்று அடுத்த ஆண்டு ஆரம்பப் பகுதியில் பில்கேட்ஸ் இலங்கைக்கு வரவுள்ளமை பெருமைக்குரியதும் வரவேற்கத்தக்கதும் ஆகும்.****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்பு விழா

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த

**சரஸ்வதி விலாஸ் சைவ உணவகம்**

மீண்டும் புதுப்பொலிவுடன்

இன்று (16.06.2008) திங்கட்கிழமை

**70, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்தில் இயங்கும் என வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு அறிவிக்கின்றோம்.

*70, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*

குணம்
சரஸ்வதி விலாஸ்

# கண்ணீர் அஞ்சலிகள்



சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுக்க அரும்பணியாற்றியதுடன் நலிவுற்றவர்களுக்கு உதவுவதில் தன்னையே ஈடுபடுத்திய அன்னை

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

சிவபூமி அறக்கட்டளை, சிவபூமி பாடசாலை,
சிவபூமி முதியோர் இல்லம்.

# மங்காத மாணிக்கம் மாயமாய் மறைந்தது



சைவமும் தமிழும் ஈன்றெடுத்த மாணிக்கம்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மையார் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளைத் தியானித்து நிற்கிறோம்.

துர்க்காதேவி தேவஸ்தானம்,
அந்தணப் பெருமக்கள்.

# கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



சைவமும் தமிழும் மலர்ச்சிபெற தன்னை அர்ப்பணித்த அன்னை

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மையார் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

தாயகம் சிறுவர் இல்லம்,
கொனிக்கா கலர்லாப்.

# கண்ணீர் அஞ்சலி



சைவப்பணியுடன் தமிழையும் வளர்க்க அரும் பாடுபட்ட

*கலாநிதி*

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அன்னைக்கு எமது கண்ணீா அஞ்சலிகள்.

ஹரன் புடைவையகம்,
திருநெல்வேலி.

# கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெற தன்னை முழுமையாக அர்ப்பணித்த சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அன்னையின் மறைவு கேட்டு துயரடையும் நாங்கள் அவருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். அவரின் ஆத்மா சந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலகம்,
வலி.வடக்கு,
தெல்லிப்பழை.

பிரதேச செயலரும்
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலைகளுக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அன்னையின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

யா/நடேஸ்வராக் கல்லூரி,
யா/நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள்,
இதர ஊழியர்கள், பழைய
மாணவ சங்கத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் போசகர்

கலாநிதி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மா அவர்களுக்குஎமது இதய அஞ்சலிகள்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர்


# பெருமகிழ்வோடு அழைக்கின்றோம்

**Digital Electronics**
Show Room

யாழ் மண்ணில் இலத்திரனியல் துறையில்
புத்தொளிபரப்ப கஸ்தூரியார் வீதியில் ஓர் காட்சியறை

நிகழும் வைகாசித் திங்கள் 16.06.2008 இன்று
காலை 11.53 மணி தொடக்கம் 01.32 மணிவரையுள்ள சுபநேரத்தில்

**திரு.T.ஜெயராஜசிங்கம்**

(சிரேஷ்ட முகமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

அவர்களால் இன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.




J.G Creation-7749913123


# புலிகளின் தளபதி றெஜித்தன் மரணம்

கிளிநொச்சி, ஜூன் 16

விடுதலைப் புலிகளின் இம்ரான் பாண்டியன் படையணியின் தளபதி லெப். கேணல் றெஜித்தன் உயிரிழந்துள்ளார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இவரின் இறுதி வீரவணக்க அஞ்சலி நிகழ்வு புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ள விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் பின்னர் அவரின் வித்துடல் விசுமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புலிகளின் தளபதிகள், போராளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# மரண அறிவித்தல்கள்

## நாகபூரணி சிவராசா



கச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா,சிட்னி, வென்ற் வேத்விலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபூரணி சிவராசா (இளைப்பாறிய ஆசிரியை, விக்னேஸ்வரா வித்தியாலையம், மீசாலை) நேற்று (15.06.2008) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை-மீனாட்சிப்பிள்ளை (பச்சைமுத்து) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருநெல்வேலி நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், நாகமுத்து சிவராசா (இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சிவாணந்தன் (London), சிவோதயம் (தவம் - U.S.A), மீனா (Went Worth ville), சிவநாதன் (நாதன்-ஏரோலங்கா உரிமையாளர், U.S.A) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜசோதரா (London), குமுதகுமாரி (U.S.A), சிவராசா (Went Worth ville), குசலகுமாரி (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நாகரட்ணம், காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானலோசனி, நாகரட்ணம், கமலாதேவி, துரைராசா ஆகியோரின் மைத்துனியும், ஜனகன் (London), ரஜீவ் (Australia) தனுஷன் (U.S.A), நிரோஷன், அஸ்வின்(U.S.A), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.06.2008 வியாழக்கிழமை சிட்னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
*ஆஸ்திரேலியா.* குடும்பத்தினர்

## திருமதி சுப்பிரமணியம் அன்னலக்சுமி

கோண்டாவில் கிழக்கை பிறப்படமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சுப்பரமணியம் அன்னலக்சுமி (சின்னப்பிள்ளை) நேற்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லமுத்து தம்பதியினரின் மகளும்காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை,கதிரிபிள்ளை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசையா, வேலாயுதபிள்ளை, மகேஸ்வரி மற்றும் அன்னம்மா (கனடா), அன்னலிங்கம்(லண்டன்) ஆகியோரது சகோதரியும் சிவராசா(ராசு), சிவராணி, சிவநேஸ்வரி, சிவமணி ஆகியோரது தாயாரும், விக்கினேஸ்வரி, அமரர் விக்கினேஸ்வரன் மற்றும் கோபால கிருஸ்ணன் (முருகன் மில், சாவகச்சேரி) ஆகியோரின் மாமியும், சுயாதா, ரமணன், சுமதி, சபேசன், அமரர் சுதேசன் மற்றும் வனிசியா, சிந்துயா, துசியா, பிரியா, கோபிராச், கிரிஜா, வனஜா ஆகியோரது பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் தரப்படும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (75345)

தகவல்:
மகன்
சிவராசா(ராசு)

## தர்மலிங்கம் அற்புதம்



ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அற்புதம் நேற்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மசீலன், ஆனந்தரூபன் (தர்மரூபன் பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் அன்புத் தாயும், தர்ஷினி, தக்ஷினி (மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சடாசிவம், காலஞ்சென்ற பூமணி, இராசதுரை, மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிலாஷினி, பிரதாஜினி (உடுவில் மகளீா கல்லூரி), கஜேந்திரன், தர்மேந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), தர்ஷிகன் (உடுவில் மகளீா கல்லூரி) கபில்தேவ் (கொக்கிகுவில் இந்து ஆரம்ப பாடசாலை), நம்பியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*மானிப்பாய் வட.கிழக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
த.ஆனந்தரூபன்
(மகன்).

## திருமதி கந்தசாமி ஆச்சாரியார் கண்ணகை



வவுனியாவைப் பிறப்பிடமாகவும், சிவன் கோவில் வடக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகை நேற்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமைசிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் கந்தசாமி ஆச்சாரியின் அன்பு மனைவியும் அமரர் சுப்பிரமணியம்-லெட்சுமியின் அன்பு மகளும் சேகர், சிவராஜா (போகன்), சண்முகராஜன், அமுதினி ஆகியோரின் அன்பு தாயாரும், புவனேஸ்வரி, இராமலட்சுமி, தயாளினி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற கந்தசாமி ஆச்சாரி, அகிலாண்டேஸ்வரி, சண்முகவடிவேல் ஆச்சாரி (வவுனியா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமலிங்கம் அருணாசலம், தெட்சணாமூர்த்தி, செல்லம்பாள் ஆகியோரின் மைத்துனியும் வைத்தீஸ்வரன், சிவசங்கர், சிவதர்சன், கௌரீசன், கௌமிகா, விதுசன், யதுசன், அபிராமி, சங்கரி, நிலாசன், நிலக்சன் ஆகியோரின் போர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.06.2008) பி.ப 2 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்

*சிவன் கோயில் வடக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (75348)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் விசையாக விளங்கிய அன்னையின் பணிகள்

## பல்கலைக்கழகத் துணைவேந்தர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 16

சைவத் தமிழ் மேம்பாட்டுக்கும் மறுமலர்ச்சிக்குமான பெரும் விசையாக அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் பணிகள் விளங்கின.

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவு குறித்து விடுத்த இரங்கல் செய்தியில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலமான செய்தி நெஞ்சுக்குக் கனமானது. சைவத்தமிழ் மேம்பாட்டுக்கும் மறுமலர்ச்சிக்குமான பெரும் விசையாக அவரது பணிகள் விளங்கின. அவரது கருணையான செயற்றிட்டங்களினால் வாழ்வு பெற்ற ஆதரவற்ற பிள்ளைகள், ஏனைய சமூகநலத்திட்டங்கள் அவரது சமூகப் பயனான வாழ்வின் பதிவுகளாகும்.

ஆலயத்தை சமூகப் பணி மையமாக்கிய பெருந்தலைவியாக அவரது புகழ் வரலாற்றில் எழுதப்படும். அவரது சமூகப் பணிகளைத் கௌரவித்து எங்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் தந்து பெருமை பெற்றது.

இன்று அவர் பிரிவால் தவிக்கும் துர்க்கா மகளிர் இல்லப்பிள்ளைகள், சைவத் தமிழ் இதயங்களோடு நானும் பல்கழைக்கழக சமூகமும் இணைந்து கொள்கிறோம் - என்று உள்ளது. (அ)

# அன்னைக்கு அஞ்சலி செலுத்த அரை நாளுடன் பணிகளை நிறுத்துக

## பாடசாலைகள், வர்த்தக நிலையங்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இறுதி நிகழ்வு நடைபெறும் இன்றைய தினம் பாடசாலைகளை நேரத்து டன் மூடி, வர்த்தக நிறுவனங்களை அரை நாளுடன் மூடி, இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட் டுள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமச்சார்யா சுவாமிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய சகல பாடசாலைகளிலும் இன்று காலை விசேட பிரார்த்தனைகளை நடத்தும் படியும் அவர் வேண்டியுள்ளார்.

கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு துக்கம் அனுஷ்டிக்கும்படியும் அவர்கோரியுள்ளார். (அ-01)

# தமிழின வாழ்வு, வளம், விடுதலைக்காக பிரார்த்தித்து வந்த பெருமாட்டி

## மாவை சேனாதிராசா இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சமய சமூகப் பணிகளுக்கு மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வு, வளம் மற்றும் விடுதலைக்காகவும் வேண்டி பிரார்த்தித்து வந்த பெருமாட்டி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அம்மா என்று அனைவராலும் அழைக்கப்பட்ட தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுச் செய்தி கேட்டு சகலரும் பதைபதைத்துக் கண்ணீர் வடிக்கின்றனர். அம்பாள் அடியார்களுக்கு ஆறுதல் தந்த ஆன்மீக மரம் சாய்ந்து விட்டது என்ற பிரேமை சகலருக்கும் ஏற்படுகிறது.

தெல்லிப்பழைக்கு நேற்று முன்தினம் சென்று காணமுடியாத அம்மையாரை யாழ். ஆஸ்பத்திரியில் மூச்சுப் பேச்சற்ற நிலையில் பார்த்து வேதனை அடைந்தேன்-

அவரது சமய சமூகப் பணிகள் எல்லோருக்கும் வழிகாட்டிகளாக அமைய வேண்டும். - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (அ-1)

# வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இன்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூன் 16

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இன்றைய காலைப் பிரார்த்தனையின் போது-

அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆத்மா சாந்தியடைய வேண்டிச் சிறப்பு வழிபாடு நடத்துமாறு-

வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவுறுத்தி உள்ளார்.

தெல்லிப்பழையில் மாலையில் நடைபெறவுள்ள அன்னையின் இறுதி ஊர்வலத்திலும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறும் வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

# புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு

கொழும்பு, ஜூன் 16

சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீதான தடைகளை நீக்கி, தமிழீழத் தனியரசை அங்கீகரிக்கக்கோரி உலக நாடுகள் பலவற்றில் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள நடைபெற்று வருகின்றன.

புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழுகின்ற நாடுகளிலேயே இந்நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

டென்மார்க் ஒகுஸ் நகரில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்றது.

அங்கு இந்தியாவில் இருந்து வருகை தந்த ஓவியர் புகழேந்தி, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்த மூர்த்தி, பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி. கிருபாகரன் மற்றும் பல மதகுருமார்கள் உரைநிகழ்த்தினர்.

அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இருந்து புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், தளபதிகளின் உரைகளும் காணொளியில் காண்பிக்கப்பட்டன.

ஒஸ்லோவில் நடைபெற்ற இந்த பொங்கு தமிழ் நிகழ்வில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த பாவலரும், தமிழ் உணர்வாளருமான அறிவுமதி மற்றும் புலமைப்பித்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் மற்றும் இளம்பரிதி, யோகி, புதுவை இரத்தினதுரை ஆகியோரின் உரைகளும் காணொளியில் காண்பிக்கப்பட்டன.

இதேவேளை, நெதர்லாந்து, இத்தாலி, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளிலும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நடைபெற்றன.

அடுத்த சில நாட்களில் பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மன், நெதர்லாந்து, சுவிஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## நாடளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச, தனியார்துறை மற்றும் தோட்டத் தொழில் துறையைச் சேர்ந்தவர்களுக்கு 5,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டுமெனக் கோரி மூன்று கட்டங்களாக இப்பணிப் பகிஷ்கரிப்பை நடத்துஉவதற்கு ஜே.வி.பி. திட்டமிட்டிருக்கிறது.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படவுள்ளது.

இலங்கையின் அனைத்து முன்னணி தொழிற்சங்கங்களையும் இணைத்து இப்பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.பி.லால்காந்த அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்களுக்கும் இதற்கான அழைப்பு விடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஜூலை மாத ஆரம்பத்தில் இடம்பெறும். நிறுவனங்களுக்கு இடையிலான தொழிலாளர் சங்கங்கள் இதனை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் நாடளாவிய ரீதியில் அரச துறையைச் சேர்ந்தவர்கள் ஒருநாள் போராட்டத்தை மேற்கொள்வர்.

ஐயாயிரம் ரூபா சம்பள உயர்விற்கு அரசு இணங்காத பட்சத்தில் ஜூலை மாத நடுப்பகுதியில் அரச, தனியார், தோட்டத் தொழிற்றுறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொள்ளும்.

இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைத் துறைமுக அதிகார சபை மற்றும் சுகாதாரத் தொழிற்றுறையைச் சேர்ந்தவர்களும் இப்பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## கிடைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகள் நிறைவேற் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது இடைக்கால செயலணிக் குழு இயங்குகிறது. கிடைத்ததைக் கொண்டு அதநூடாக மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதுடன் படிப்படியாக எமதுபிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டுள்ளன. மக்கள் சுதந்திரமாகக் கருத்துக்களைக் கூறமுடியாத நிலையிலும் தொழில்களைச் செய்யமுடியாத நிலையிலும் இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளில் 50 சதவீதமானவற்றுக்கு மாகாண சபை மூலம் தீர்வுகாணமுடியும் . இந்தியா அதற்கு ஆதரவாக உள்ளது. இருப்பதைப் பாதுகாத்து அதிலிருந்துதான் முன்னேறிச் செல்லமுடியும்.

அதற்கு ஏற்ற வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த பத்திரிகைகள் தமது பங்களிப்பை உரிய முறையில் வழங்க வேண்டும்.

விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக தென்பகுதிக்கு அவற்றைக் கொண்டு செல்வதற்கு உதவும் வகையில் குறிகாட்டுவான் கடல்வழிப்பயணத்தை ஏற்படுத்தவேண்டும் எனக்கருதி, குறிகாட்டுவான் - மன்னாருக்கான படகுச் சேவையை நடத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் உதவி கேட்டோம். இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே சாத்தியம் என அவர்கள் கூறினார்கள் இன்றுவரை அதனை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது - என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மணலாறுப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனகபுரம், களப்பு பொலிஸ் நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் அவர் வைத்திருந்த துப்பாக்கியும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (க-9)

## மட்டு கல்லடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தையடுத்து பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

## பொலநறுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைப்புத் தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 25 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் அரிசி ஆலைகளில் பணிபுரிவோர் என்றும், இவர்களில் அநேகமானவர்கள் வவுனியா மற்றும் வாழைச்சேனைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகியும் உள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது.

மூன்று வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. நான்கு வீடுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் விசுவமடு, புன்னை நீராவியடியைச் சேர்ந்த நாகதம்பிராசா (வயது - 20), ஐயாத்துரை சுந்தரலிங்கம் (வயதுண - 47), விசுவமடுவைச் சேர்ந்த தவராஜா பானுஜன் (வயது-19), முத்தையன் கட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகந்தன் (வயது-19) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பின்வருவோர் காயமடைந்தனர்:-

* ஆறு பிள்ளைகளின் தந்தையான புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தங்கராசா
* ஐந்து பிள்ளைகளின் தந்தையான வேணாவிலைச் சேர்ந்த அசோகன்
* ஒன்பது பிள்ளைகளின் தந்தையான வேணாவிலைச்சேர்ந்த பத்மநாதன்(வயது - 76)
* ஒரு பிள்ளையின் தாயான , புதுக்குடியிருப்பு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெயமோகினி (வயது - 32)
* புதுக்குடியிருப்பு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கலைத்தேவன் (வயது - 36)
* கற்சிலைமடுவ்வைச் சேர்ந்த லட்சுமணன் (வயது - 58)
* புதுக்குடியிருப்பு2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தினேஸ்(வயது - 18)
* புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரன் (வயது - 52)
* இரணைப்பாலை 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பார்புகழன் (வயது - 27)
* இரணைப்பாலையைச்சேர்ந்த விநோதன்

இதற்கிடையில் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு தென்மேற்குப் புறத்தே உள்ள வேணாவில் பகுதி மீது நேற்றுக் காலை 10 மணியளவில் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்றும் -


**திருமணம் பிற்போடப்பட்டது**

தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (16.06.2008) திங்கட்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறவிருந்த தர்மசீலன்- ஜெயமிதுலா ஆகியோரின் திருமணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

திருமதி ம.சிவபாதசுந்தரம்,
அராலி- மத்தி,
வட்டுக்கோட்டை.

திரு-திருமதி.அழகரத்தினம்,
பிள்ளையார் கோவிலடி,
மாதகல்.

**Microsoft Certified Systems Engineer**

* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.06.2008 09.30AM

இன்றும் நாளையும் 50% கற்கைநெறிக் கட்டண சலுகை

விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, [illegible]
MCS Supported By [illegible]

**A/L 2008 PHYSICS**

கடந்த காலவினாக்கள் துரித மீட்டல்

திங்கள்- வியாழன் 3.00-4.00

K.Selvan
NAVALAR Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.